
MINISTÈRE
DE L'INTÉRIEUR

*Liberté*
*Égalité*
*Fraternité*

உள் துறை அமைச்சகம்

ஃப்ரான்ஸ் நாட்டில் உள்ள வெளிநாட்டவர் இயக்ககம்



# ஃப்ரான்ஸ் நாட்டில் தஞ்சம் கோருவோருக்கான துணைக் கையேடு

gDA செப்டம்பர் 2020

## அட்டவணை


1. பாதுகாப்பின் வகைகள் ... 4

1.1. அகதியின்அந்தஸ்து. ... 4

1.2. இரண்டாம்நிலைபாதுகாப்பு. ... 4

2. நடைமுறை மற்றும் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிய வைத்தல் ... 5

2.1.தஞ்சம்கோருவோரின் முதல் வரவேற்பு. ... 5

2.2. தனிப்பட்ட சாளரத்தில் விண்ணப்பத்தைப் பதிதல். ... 6

2.2.1. முதல் நிலை : காவல் துறையில் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிதல். ... 6

■ உங்கள் விண்ணப்பத்தைப் பரிசோதிக்கும் நாட்டைத் தீர்மானம் செய்தல். ... 6

■ உங்கள் விண்ணப்பத்தின் தேர்வு. ... 7

■ OFPRAஅலுவலக சந்திப்பிற்கு மொழித் தேர்வு. ... 8

■ தஞ்சம் கோரும் விண்ணப்பச் சான்று வழங்குதல். ... 8

■ தஞ்சம் தவிர மற்ற காரணங்களுக்காகத் தங்குவதற்கு அனுமதி கோருதல். ... 10

2.2.2. இரண்டாம் நிலை : தேவைகளைக் கண்டறிதல் மற்றும் ஓஎஃப்ஐஐ OFIIஆல் பொறுப்பேற்றல். ... 10

■ உங்களின் தனிப்பட்ட தேவைகளை உங்கள் சாளரத்தினால் கண்டறியப்படல். ... 10

■ உதவி அளிக்க ஒப்பளிப்பு ... 11

2.3. தனிப்பட்ட சாளரத்தில் சந்தித்தபின் உதவி. ... 11

3. தஞ்சம் கோரும் விண்ணப்பத்தின் நிபந்தனைகள் ... 12

3.1.ஃப்ரான்ஸ்நாட்டின் அகதிகள் மற்றும் நாடற்றோர் பாதுகாப்பு அலுவலகத்தின் மூலம் பரிசோதனை(OFPRA). ... 12

■ OFPRA படிவம் பூர்த்தி செய்தல். ... 12

■ OFPRAஉக்கு கோப்பை அனுப்புதல். ... 12

■ OFPRA இலிருந்து விண்ணப்பம் பெறப்பட்டதற்கான அத்தாட்சி. ... 13

■ சாதாரண முறை மற்றும் துரித முறையில் விண்ணப்பத்தைப் பரிசோதித்தல். ... 14

■ OFPRA வில் நேர்முகம். ... 14

■ மருத்துவப் பரிசோதனை. ... 15

■ OFPRA வின் முடிவு. ... 15

■ OFPRAவின் முடிவின் மீதான முறையீடு. ... 17

■ OFPRA வின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் உதவிக்கு முடிவு ... 17

3.2. CNDAமூலம்பரிசோதனை ... 18

■ முறையீட்டுக்கான கால அவகாசம். ... 18

■ வழக்கறிஞரின் உதவி. ... 18

■ முறையீடு. ... 19

■ முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதின் அத்தாட்சி. ... 20

■ முறையீட்டின் தடை விதிக்கும் தன்மை. ... 20

■ CNDAவில் நேரடி விசாரணை. ... 21

■ CNDA வின் முடிவைத் தொடர்ந்து உதவிக்கு முடிவு ... 22

■ நீதிமன்றத்தின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் உதவிகக்கு முடிவு. ... 22

3.3.மூடப்பட்ட விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்தல். ... 23

3.4.மறு பரிசீலனை. ... 23

4. விண்ணப்பதாரரின் வரவேற்பிற்கான நிபந்தனைகள் மற்றும் அவரது உரிமைகள் ... 25

4.1. தஞ்சம் கோருபவர் தங்குதல். ... 25

■ தங்குமிடங்கள் ... 25

■ தங்குமிடம் நோக்கிச் செல்லுதல். ... 25

■ தங்குமிடத்தில் அனுமதி மற்றும் அங்கிருந்து வெளியேறுதல். ... 26

4.2. தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகை(ADA)........ 26
■ அதைப் பெறுவதற்கான நிபந்தனைகள்........ 27
■ கோரிக்கையை பூர்த்தி செய்தல்........ 27
■ உதவித் தொகையின் அளவு........ 27
■ பணம் பெறுதல்........ 28
■ முறையீடு........ 28
4.3. கல்வி வசதி........ 29
4.4. மருத்துவ வசதி........ 29
■ எங்கு சிகிச்சை பெறுவது?........ 29
■ உங்கள் மருத்துவச் செலவிற்கான உதவியை எவ்வாறு பெறுவது?........ 30
4.5. வேலை வாய்ப்பு........ 31
5. தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் இந்த நாட்டில் தங்குவதற்கான உரிமை மீதான விளைவு........ 32
5.1. OFPRA மற்றும்CNDAவின் விண்ணப்ப நிராகரிப்பதென்ற முடிவு........ 32
■ OFPRAவின் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் தங்குவதற்கு முடிவு........ 32
■ CNDAவின் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் தங்குவதற்கு முடிவு........ 34
5.2.புறப்பட்டு வந்த நாட்டிற்கு உதவியுடன் திரும்புதல்........ 35
5.3.புறப்பட்டு வந்த நாட்டிற்கு உதவி இல்லாமல் திரும்புதல்........ 36
6. பாதுகாப்புப் பெறும் நபரின் உரிமைகள்........ 37
6.1.ஃப்ரான்ஸ் நாட்டில் தல்குதல்........ 37
6.2.குடும்பம் தங்கியிருத்தல்........ 37
■ உங்கள் குடும்பத்தினர் தங்குவதற்கான உரிமை........ 37
■ குடும்பத்தினருடன் இணைவதற்கான உரிமை........ 38
6.3.ஒருங்கிணைதல்........ 39
■ ஃப்ரான்ஸ் நாட்டு குடி பெயர்தல் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலகத்துடன் செய்து கொள்ளும் வரவேற்பு மற்றும் ஒருங்கிணைதலுக்கான ஒப்பந்தம் (OFII)........ 39
6.4. சமூக நல உரிமைகள்........ 39
■ தங்குமிட வசதி........ 39
■ வேலை வாய்ப்பு வசதி........ 39
■ மருத்துவ வசதி........ 40
■ சமூக நல மற்றும் குடும்ப நல சேவைகள்........ 40
6.5. வெளிநாட்டிற்குச் செல்லுதல்........ 41
6.6. குடியுரிமை மாற்றம்........ 42
6.7.பாதுகாப்புக்கு முடிவு........ 42
இணைப்பு:உபயோகமான விலாஸங்கள்........ 43
1. தேச அளவிலான விலாஸங்கள்........ 43
■ நிறுவனங்கள்........ 43
■ சர்வ தேச அமைப்புகள்........ 43
■ சங்கங்கள்........ 43
2. உள்ளூர் விலாஸங்கள்........ 45
■ தனிப்பட்ட சாளரங்கள்........ 45
■ காவல் அலுவலகங்கள்........ 46
■ (OFII யின் பிராந்திய அலுவலகங்கள்)........ 49

# 1. பாதுகாப்பின் வகைகள்

நீங்கள் தஞ்சம் கோரி உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவுடன் அது ஃப்ரான்ஸ் நாட்டினால் பரிசீலிக்கப்பட வேண்டியது என்று தெரிந்ததும் உங்கள் விண்ணப்பம் தஞ்சம் அளிக்கும் சட்டத்தின் கீழ் இயங்கும் தேசிய நீதி மன்றத்தின்(CNDA) கட்டுப்பாட்டில் இருக்கும் அகதிகள் மற்றும் நாடற்றோருக்கான பாதுகாப்புக்கான ஃப்ரான்ஸ் நாட்டு அலுவலகத்தினால்(OFPRA) பரிசீலிக்கப்படுகிறது.

தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பரிசோதித்தவுடன் உங்களுக்கு அதிகாரிகளால் தஞ்சமளிக்கும்கட்டமாக : அகதி எனும் நிலைமை அங்கீகரிக்கப்படலாம் அல்லது இரண்டாம் கட்ட பாதுகாப்புச் சலுகைகள் வழங்கப்படலாம்.

## 1.1. அகதியின் அந்தஸ்து.

அகதி எனும் அந்தஸ்து உங்களுக்கு மூன்று அடிப்படைகளின் கீழ் வழங்கப்படலாம் :

- 28 ஜூலை 1951 ஆம் தேதி அகதிகளுக்கான சட்டப்படி **ஜெனிவா கோட்பாட்டின் கீழ்** ‘ தன் இனம், மதம், நாடு, ஏதாவது ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் அங்கத்தினர் எனும் காரணத்தினால் அல்லது அவரது அரசியல் கொள்கையினால் தான் குடியுரிமை பெற்ற நாட்டை விட்டு வெளியேறியிருந்தால் அந்த நாட்டின் பாதுகாப்பைக் கோர முடியாமல் இருந்தாலோ அல்லது அச்சப்பட்டாலோ தன் நாட்டிற்குத் திரும்ப முடியாத நிலையில் அகதி எனும் அந்தஸ்து வழங்கப்படுகிறது.
- **அடிப்படை சாஸன ரீதியான தஞ்சம்**, இது 1946 ஆம் ஆண்டு அரசியல் சாஸனத்தின் முன்னுரை ஷரத்து 4 இன் கீழ் விடுதலைக்காகப் போராடியதால் கொடுமைக்குள்ளாகும் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. ;
- **ஐக்கிய நாடுகள் சங்கத்தின் உயர் மட்டக் குழுவின் (HCR) முடிவு காரணமாக:**நீங்கள் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் உயர் மட்டக் குழுவின் சட்டப் பிரிவுகள் 6 மற்றும் 7 இன் கீழ் அகதி என்று அங்கீகரிக்கப்பட்டால்.

## 1.2. இரண்டாம் நிலை பாதுகாப்பு.

முழு நிலை அகதி என்று அங்கீகரிக்கப்பட முடியாத நிலையில் உள்ள ஆனால் நிச்சயமான காரணங்களுடன் தங்கள் நாட்டில் கீழ்க்கண்டவற்றில் ஒரு உண்மையான ஆபத்துக்குள்ளாகக் கூடியவராக இருந்தால் இரண்டாம் நிலை பாதுகாப்பு வழங்கப்படுகிறது:

- மரண தண்டனை ;
- சித்ரவதை அல்லது மனிதத்தன்மையற்ற நடத்தைக்குள்ளாதல் ;
- அவரது உயிர் அல்லது உடலுக்குச் சேதம் விளைவிக்கக்கூடிய யார் என்று பாராமல் மற்றவர்களுக்குப் பரவக்கூடிய ஒரு உள் நாட்டு அல்லது சர்வ தேசப் போர் ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலையில் இருந்தால்.

***நாடற்ற நிலைமை***

*நாடற்றோர் பற்றிய 28 செப்டெம்பர் 1954 ஆம் ஆண்டு ந்யூ யார்க் கோட்பாட்டின் கீழ் ‘எந்த ஒரு நாட்டின் சட்டத்தின் கீழும் அந்த நாட்டிலிருந்து வெளியேறியவர்’ என்று கூறப்பட முடியாதவருக்கு ‘நாடற்றவர்’ என்ற அந்தஸ்து வழங்கப்படலாம்.*

*மேலே குறிப்பிட்ட இரண்டு வகைப் பாதுகாப்பிலிருந்து இது வேறுபட்டது. தஞ்சம் கோரும் விண்ணப்பத்திலிருந்து இது வழங்கப்படுவதில்லை. காவல் துறை மூலமாக விண்ணப்பிக்காமல் நேரடியாக ஓஎஃப்பீஆர்ஏ ( l’OFPRA) வுக்கு விண்ணப்பிக்க வேண்டும், அது உங்களு விண்ணப்பத்தைப் பரிசீலித்து நிர்வாக நீதி மன்றத்தின் மேற்பார்வையில் ஒருவரை அகதி என்று அங்கீகரிக்கலாம்.*

# 2. நடைமுறை மற்றும் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிய வைத்தல்

ஃப்ரான்ஸ் நாட்டில் தஞ்சம் கோரி விண்ணப்பிக்க நீங்கள் தஞ்சம் கோருவோருக்கான முதல் நிலை அலுவலகத்தை (SPADA)அணுக வேண்டும். அங்கு உங்களுக்கு விண்ணப்ப நடைமுறை பற்றி விளக்கப்படும் மற்றும் அந்தப் பகுதிக்கான தகுந்த தஞ்சம் வழங்கும் அலுவலகத்தில் சந்திப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

அந்த அலுவலகத்தில் உங்கள் விண்ணப்பம் பதிவு செய்யப்படும். எந்த வகையைச் சார்ந்தது என்று நிர்ணயிக்கப்படும் மற்றும் உங்கள் தேவை என்னவென்று வகைப்படுத்தப்படும். மேலும், நிபந்தனைகளுக்குட்பட்டு, உங்கள் வரவேற்பிற்கான நிபந்தனைகளும் உங்களுக்கு விளக்கப்படும் ( தங்குதல், உதவித் தொகை போன்றவை)).

**தங்குவதற்கான எந்த நிலைகளில் நீங்கள் தஞ்சம் கோரி விண்ணப்பிக்க முடியும்?**

நீங்கள் முறைப்படியோ அல்லது வேறு விதமாகவோ எப்படி ஃப்ரான்ஸ் நாட்டிற்கு வந்திருந்தாலும் தஞ்சம் கோரி விண்ணப்பிக்கலாம். ஃப்ரான்ஸ் நாட்டிற்குள் நீங்கள் சரியான முறையில் நுழையவில்லையென்பது உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிவு செய்ய ஒரு தடையாக இருக்காது.

ஃப்ரான்ஸ் நாட்டிற்குள் நுழைந்ததிலிருந்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விண்ணப்பத்தைப் பதிவு செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. நடைமுறையில் இருக்கும் விசாவுடன் ஃப்ரான்ஸ் நாட்டிற்குள் வந்திருந்தாலும் உடனே பதிவு செய்யவும். ஃப்,ரான்ஸ் நாட்டிற்குள் நுழைந்ததிலிருந்து 90 நாட்களுக்குள் விண்ணப்பத்தைச் சமர்பிக்காவிட்டால் உங்களுக்கு உதவி நிராகரிக்கப்படலாம்.

## 2.1. தஞ்சம் கோருவோரின் முதல் வரவேற்பு.

தஞ்சம் கோருவோருக்கான தனிப்பட்ட சாளரத்திற்குச் செல்லும் முன் (GUDA), நீங்கள் தஞ்சம் கோருவோருக்கான முதல் நிலை அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும் (SPADA). சங்கங்களால் நிர்வகிக்கப்படும் இந்த அலுவலகங்கள் தஞ்சம் கோரும் உங்கள் நடவடிக்கைக்கு உதவி செய்யும்.

இந்த முதல் நிலை அலுவலர்கள் வேலை:

- தஞ்சம் கோரும் தடைமுறைகள் பற்றி உங்களுக்கு விளக்குவது:
- உங்கள் நிலைமைக்கு ஏற்றாற்போல உங்கள் விண்ணப்பத்தைப் பதிவு செய்யும் வழி பற்றி விளக்குவது:
- தனிப்பட்ட சாளரத்தில் உங்களுக்காக நேரம் பெற்றுத் தருவது மற்றும் அதை உங்களுக்குத் தெரியப்படுத்துவது. இந்தத் தபாலில் நீங்கள் கண்டிப்பாக தனிப்பட்ட சாளரத்திற்குச் செல்ல வேண்டிய இடம், தேதி மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். பொதுவாக, இந்தச் சந்திப்பு அதிகபட்சமாக நீங்கள் முதல் நிலை அலுவலக்த்திற்குச் சென்றதிலிருந்து மூன்று நாட்களுக்குள் இருக்கும். தகுந்த காரணம் இருந்தால் சந்திப்பு 10 நாட்கள் வரை ஒத்திப் போடலாம்:
- உங்களுக்குத் தனிப்பட்ட சாளரத்தில் கேட்கப்படும் அடையாளப் புகைப்படம் எடுக்கப்படும்.

மின்னனுக் கோப்புகளாக உங்கள் விவரங்கள் தனிப்பட்ட சாளரத்திற்கு அனுப்பப்படும்.

<u>கவனத்திற்கு</u> : உங்கள் அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். தாமதமானால் உங்களை சந்திக்க இயலாது. அப்படியென்றால் நீங்கள் மீண்டும் முதல் நிலை அலுவலகத்திற்குச் சென்று சந்திப்பிற்கான அனுமதி பெற வேண்டும்.

உங்களுக்கு தஞ்சம் கோருவோருக்கான வரவேற்பு மையத்தில் (CADA) அல்லது வேறு மையத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்காவிட்டால் தனிப்பட்ட சாளரத்தில் உங்கள் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டவுடன் உங்களுக்குத் தங்குவதற்கு இடம் இந்த முதல் நிலை அலுவலகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும். (பகுதி 2.2.1 இல் பார்க்க தலைப்பு - உங்கள் தங்குமிடத்தை எவ்வாறு நிர்ணயிப்பது?).

## 2.2. தனிப்பட்ட சாளரத்தில் விண்ணப்பத்தைப் பதிதல்.

உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிவு செய்ய நீங்கள் தனிப்பட்ட சாளரத்திற்கு ஸ்பாடா (SPADA) வினால் ஏற்பாடு செய்யப்பட்ட அழைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் படி நீங்கள் செல்ல வேண்டும். (பார்க்க 2.1).

இந்த அலுவலகத்தில் காவல்துறை மற்றும் ஃப்ரான்ஸ் நாட்டு குடியேற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலகத்தைச் (OFII) சேர்ந்த அதிகாரிகள் உங்கள் வரவேற்பிற்காக இருப்பார்கள்..

ஃப்ரான்ஸ் நாட்டின் பகுதிக்குள் மொத்தம் 33 அலுவலகங்கள் இருக்கின்றன. (இணைப்பில் பட்டியலைக் காணலாம்). தனிப்பட்ட சாளத்தில் சந்திப்பு இரண்டு நிலையில் நடை பெறுகிறது:

- முதலில் காவல் துறை அலுவலர்களுடன் உங்கள் விண்ணப்பத்தைப் பதிவு செய்ய (2.2.1) ;
- இரண்டாவது நிலையாக OFII அதிகாரிகளுடன் உங்கள் தேவைகளைப் புரிந்து கொள்ளவும் உங்களைப் பொறுப்பேற்பதற்கான வழிமுறைகளை நிர்ணயிக்கவும் (2.2.2).

**உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிவு செய்ய உங்களுக்கு ஒரு விலாஸம் தேவையா?**

உங்கள் விண்ணப்பத்தைப் பதிவு செய்ய உங்களுக்கு ஒரு விலாஸம் அவசியமில்லை.

மாறாக, உங்கள் விண்ணப்பத்தின் பதிவைப் புதுப்பிக்க விலாஸம் அவசியம் தேவை *(*பகுதி 2.2.1 இல் <தஞ்சம் கோரும் விண்ணப்பத்தின் சான்றை அனுப்புதல்> என்ற தலைப்பைக் காணவும்).

### 2.2.1. முதல் நிலை : காவல் துறையில் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிதல்

**உங்களுடன் உங்கள் மைனர் குழந்தைகள் இருக்கிறார்களா**?

உங்களுடன் உங்கள் மைனர் குழந்தைகள் வந்திருந்தால் அவர்களும் உங்களைப் போலவே தஞ்சம் கோருவோராகக் கருதப்படுவார்கள். அவர்களின் விவரங்கள் உங்கள் பதிவில் பதியப்படும். பெற்றோர் இருவரும் விண்ணப்பதாரர்களாக இருந்தால் மைனர்களின் பெயர் தாயாருடன் பதியப்படும். நடைமுறை முழுக்க அவரே குறிப்பிட்ட பெற்றொராகக் கருதப்படுவார். இந்தப் பதிவு உங்கள் குடும்பத்தின் மொத்த உறுப்பினர்களைக் குறிக்காது, மாறாக நடப்பில் உள்ள விண்ணப்பதாரர்களை மட்டும் குறிக்கும்.

#### ■ உங்கள் விண்ணப்பத்தைப் பரிசோதிக்கும் நாட்டைத் தீர்மானம் செய்தல்.

முதல் நிலை அலுவலகத்தால் தனிப்பட்ட சாளரத்திற்கு அளிக்கப்பட்ட விவரங்களைச் சரி பார்த்தபின், காவல் துறையைச் சார்ந்த அதிகாரி உங்கள் விண்ணப்பத்தை ஃப்ரான்ஸ் நாடு பரிசீலிக்க வேண்டுமா என்று தீர்மானிப்பார். அதற்கு, உங்களுக்கு 14 வயது அல்லது அதற்கு மேல் இருந்தால் உங்கள் கை ரேகைகளைப் பதிவு செய்து ஒவ்வொருவருடனும் சந்தித்து முக்கியமாக உங்கள் ஆரம்ப நாட்டிலிருந்து உங்கள் பயணத்தைப் பதிவு செய்து மற்ற உறுப்பு நாடுகளில் உங்களுக்கு இருக்கக்கூடிய தொடர்புகளை, குடும்பத்தினர் போன்று, நிரணயம் செய்வார்.

இந்தத் மொத்தத் தகவல்களின் அடிப்படையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் சட்டம் விதி 604/2013 மற்றும் ஜூன் 26 2013 தேதியின் டப்ளின் III நடைமுறை என்று அழைக்கப்படும் சட்டத்தின் படி எந்த நாடு உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படும்.

***டப்ளின் III நடவடிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகள்***

இது ஐரோப்பிய ஐக்கியத்தில் உள்ள 28 உறுப்பினர்கள்: ஜெர்மனி, ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, க்ரோயேஷியா, சைப்ரஸ், டென்மார்க்*, ஸ்பெயின், எஸ்டோனியா, ஃபின்லாந்து, ஃப்ரான்ஸ், க்ரீஸ், ஹங்கேரி, அயர்லாந்து, இத்தாலி, லெட்டோனியா, லித்துவானியா, லக்ஸாம்பெர்க், மால்டா, நெதர்லாந்து, போலந்து, போர்ச்சுகல், செக் குடியரசு, ருமேனியா, ஐக்கிய அரசு, ஸ்லோவேக்கியா, ஸ்லோவேனியா மற்றும் ஸ்வீடன் மற்றும் நான்கு உப உறுப்பினர் நாட்கள்: ஐஸ்லாந்து, நார்வே, ஸ்விட்ஸர்லாந்து மற்றும் லிக்டெனஸ்டெய்ன்.

** டென்மார்க் டப்ளின் III" செயல்முறையில் வரவில்லை, ஆனால் ஜூன் 15, 1990 இல் கையெழுத்திடப்பட்ட டப்ளின் கோட்பாட்டிற்கு உட்படுகிறது.*

சமயத்தில், ஃப்ரான்ஸ் நாட்டைத் தவிர வேறு ஒரு ஐரோப்பிய நாடு உங்கள் விண்ணப்பத்தைப் பரிசோதிக்க வேண்டியிருக்கலாம். உ.ம்.:

- வேறு ஒரு நாடு தங்க அனுமதித்திருந்தால் அல்லது விசா அளித்திருந்தால் ;
- நீங்கள் முறையின்றி, தரை, விமானம் அல்லது கப்பல் மூலம் வேறு ஒரு உறுப்பினர் நாட்டின் எல்லையைக் கடந்துள்ளீர்கள் என்று நிரூபிக்கப்பட்டால் ;
- நீங்கள் ஐரோப்பிய ஐக்கியத்தினுள் முதலில் வேறு ஒரு நாட்டினுள் நுழைந்து அங்கு விசா அளிக்கப்பட்டிருந்தால் ;
- ஏற்கனவே வேறு ஒரு உறுப்பிடனர் நாட்டில் தஞ்சம் கோரியிருந்தால்.

***விண்ணப்பத்தின் பரிசோதனை வேறு ஒரு நாட்டின் பொறுப்பு என்று கண்டறிய்ப்பட்டால்?***

*<டப்ளின் III> என்றழைக்கப்படும் விதி நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். உங்களைப் பொறுப்பேற்கும்படி காவல் துறை அந்த நாட்டைக் கோரும். அப்பொழுது உங்களிடம் விண்ணப்பித்த்தற்கான சான்று வழங்கப்படும். உங்களுக்கு ஒரு மாத அவகாசம், (மேலும் நான்கு மாதங்களுக்குப் புதுப்பிகக் கூடியது) ஃப்ரானஸ் நாட்டில் தங்கியிருக்க, வேறு நாட்டிற்கு மாற்றப்படும் வரை அனுமதி கிடைக்கும்.*

*இந்த இட மாற்றம் காவல் துறையினால் கையாளப்படும். அவர்கள் உங்களுக்கு இட மாற்றம் செய்வதற்கான முடிவையும் முறையையும் தெரியப்படுத்துவார்கள். அதற்குப் பிறகு மேல் முறையீடு செய்ய உங்களுக்கு 15 நாட்கள் அவகாசம் வழங்கப்படும்.*

## ■ உங்கள் விண்ணப்பத்தின் தேர்வு

**உங்கள் விண்ணப்பத்தைப் பரிசாலிக்க வேண்டியது ஃப்ரான்ஸ் நாடாக இருந்தால்** ஓஎஃப்பீஆர்ஏ (OFPRA) சாதாரண அல்லது துரிதப்படுத்தப்பட்ட வகையில் கையாளும். துரித முறையில் OFPRAவினால் கால அவகாசங்கள் 15 நாட்கள் வரை குறைக்கப்படும் ஆனால் கொடுக்கப்படும் உத்திரவாதங்கள் இரண்டு முறைகளிலும் அதேதான்.

- **உங்கள் விண்ணப்பம், தனிப்பட்ட சாளரத்திலிருந்து இரண்டு காரணங்களுக்காக நேரடியாக, துரித முறையில் எடுத்துக் கொள்ளப்படும்** :
  - பாதுகாப்பான பிறப்பு நாடு என்று கருதப்படும் நாட்டுப் பிரஜையாக நீங்கள் இருந்தால் (அந்த நாடுகளின் பட்டியல் காவல் துறையிடம் உள்ளது அல்லது OFPRA வின் இணைய தளத்தில் காணலாம். ;
  - நீங்கள் ஏற்கனவே ஒரு முறை விண்ணப்பித்திருந்து அது நிராகரிக்கப்பட்டிருந்து நீங்கள் மறு பரிசீலனை கோரியிருந்தால்.

- **உங்கள் விண்ணப்பம், தனிப்பட்ட சாளரத்திலிருந்து கீழ்க்கண்ட காரணங்களுக்காக துரித முறையில் எடுத்துக் கொள்ளப்படலாம்** :
  - நீங்கள் உங்கள் கைரேகைகளைப் பதிவு செய்ய மறுத்தால்;
  - நீங்கள் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்தோ, தவறான தகவல்களைத் தந்தோ அல்லது சில தகவல்களை மறைத்தோ அதிகாரிகளைத் தவறு செய்யத் தூண்டினால் ;
  - வெவ்வேறு பெயர்களில் பல விண்ணபங்களைச் சமர்ப்பித்திருந்தால் ;

- ஃப்ரான்ஸ் நாட்டில் நுழைந்த பிறகு விண்ணப்பம் சமர்ப்பிக்கத் தாமதித்திருந்தால் (90 நாட்களுக்கு மேல் மற்றும் கயானாவில் 60 நாட்களுக்கு மேல்) ;
- விலக்கி வைக்கப்படுவதைத் தவிர்ப்பது மட்டும் உங்கள் விண்ணப்பத்தின் குறிக்கோளாக இருந்தால் ;
- நீங்கள் இருப்பது பொது அமைதி, பொது பாதுகாப்பு அல்லது தேசத்தின் பாதுகாப்புக்கு இடையூறாக இருந்தால்:

துரிதப்படுத்தப்பட்ட முறையில் வைக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பதியும் சமயத்தில், பொது அமைதி கருதி துரித முறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தாலொழிய, சாதாரண முறைக்கு மாற்ற OFPRA விற்கு அதிகாரம் உண்டு.

உங்கள் விண்ணப்பம் துரித முறையில் வைக்கப்பட்டிருந்தால் உங்களுக்கு பல நகல்களில் அறிக்கை அளிக்கப்படும். OFPRA விடம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் பொழுது ஒரு நகலைத் தருவது நல்லது. OFPRA வின் தீர்ப்பின் மீது மேல் முறையீடு செய்யும் சமயத்தில் CNDA விடம் ஒரு நகல் சமர்ப்பிக்கலாம். .

**குறிப்பிட்ட நிலை: நீங்கள் வெளியேற்றப்படுபவரா அல்லது நிர்வாகம் அல்லது நீதி ம்ன்றத்தினால் நாட்டினுள் நுழைய தடை விதிக்கப்பட்டவரா?**

இந்த வகையில் விலக்கி வைக்கப்பட வேண்டிய நடவடிக்கைக்குள்ளாவது உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதிவு செய்வதற்குத் தடையாக இருக்காது.

உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்வது ஃப்ரான்ஸ் நாட்டின் பொறுப்பாக இருந்தால் நீங்கள் வீட்டுக் காவலில் வைக்கப்படலாம் அல்லது கைது செய்யப்படலாம்.

அந்த நிலையில், நீங்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதிலிருந்து அல்லது கைது செய்யப்பட்டதிலிருந்து, *OFPRA* உங்கள் விண்ணப்பத்தை குறைக்கப்பட்ட கால அவகாசத்தில் பரிசீலிக்கும் (96 மணிக்குள்). விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அல்லது அனுமதிக்கப்படாவிட்டால் இந்த நாட்டில் உங்கள் உதவி முடிவுக்கு வரும். விரும்பினால், 48 மணி நேரத்திற்குள், நீங்கள் நிர்வாக நீதிபதியிடம் *CNDA* உங்கள் மேல் முறையீட்டைப் பரிசீலிக்கும் காலம் வரை உங்களை வெளியேற்றுவதைத் தள்ளிப்போடுமாறு கோரலாம். (பகுதி 5.1 பார்க்கவும்). *.*

## ■ OFPRA(ஓஎஃப்பீஆர்ஏ) அலுவலக சந்திப்பிற்கு மொழித் தேர்வு.

**உங்கள் விண்ணத்தைப் பரிசீலிக்க வேண்டியது ஃப்ரான்ஸ் என்று நிச்சயிக்கப்பட்டால்**OFPRA விடம் உங்கள் விண்ணப்பம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டவுடன், சில விலக்குகள் தவிர மற்ற நேரங்களில், ஒரு நேர்காணல் மூலம் OFPRA வினால் கேட்கப்படுவீர்கள்..

உங்கள் விண்ணப்பம் பதியப்படும் சமயத்தில் நீங்கள் OFPRA வில் உரையாடும் மொழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.. அந்தச் சமயத்தில் OFPRAவில் உபயோகத்தில் இருக்கும் மொழுகளின் பட்டியல் கொடுக்கப்படும், சுமார் 115 மொழிகள். ஒரு முறை தேர்ந்தெடுத்த பின் நீங்கள் மொழியை மாற்ற முடியாது. உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்த்தின் மீதான பரிசீலனை முடியும் வரை அந்த மொழி மட்டுமே உபயோகிக்கப்படும்.

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள மொழிகளில் ஒன்றை நீங்கள் தேர்ந்தெடுக்காவிட்டால் உங்களுக்குத் தேவையான அளவு பரிச்சயமான மொழியில் கேட்கப்படுவீர்கள்.

தஞ்சம் கோரும் நடவடிக்கையின் போது உபயோகப்படும் மொழித் தேர்வை எதிர்க்க விரும்பினால் நீங்கள் அதை உங்கள் விண்ணப்பத்தின் மீதான OFPRA வின் முடிவின் மீதானமேல் முறையீடு என்கிற விதத்தில் தான் CNDA வுக்கு முன் முறையிட முடியும்.

<u>கவனம்</u> : OFPRA வில் நடைபெறும் நேர்காணலின் தன்மை மற்றும் நேர அளவின் காரணமாக ஒருவருக்கு மொழியில் ஓரளவிற்குத் தேர்ச்சி தேவை. ஆகவே, நீங்கள் தேர்ந்தெடுத்த மொழியை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள முடியும் மற்றும் அந்த மொழியில் நீங்கள் உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும்.

## ■ தஞ்சம் கோரும் விண்ணப்பச் சான்று வழங்குதல்

எந்த நாடு உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு விண்ணப்பத்தின் மீதான நடைமுறை தேர்வு செய்யப்பட்டபின் விண்ணப்பம் பெறப்பட்டதற்கான சான்று ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்.

**உங்கள் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் பொழுது வேறொரு நாடு அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கண்டறியப்படலாம்** எனும் காரணத்தினால் முதல் முறை வழங்கப்படும் சான்று ஒரு மாதத்திற்குச் செல்லும். அதை நான்கு மாதங்களுக்குப் புதுப்பித்துக் கொள்ளலாம் (பகுதி 2.2.1 இல் எந்த நாட்டு விண்ணப்பத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தலைப்பைப் பார்க்கவும்).

**ஃப்ரான்ஸ் நாடு விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்று கண்டறியப்பட்டால்** முதல் சான்று ஒன்று உங்களுக்கு வழங்கப்படும். இந்தச் சான்று:

- சாதாரண முறையில் உங்கள் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படுவதாக இருந்தால் பத்து மாதங்களுக்கும்

- துரிதப்படுத்தப்பட்ட முறையில் பரிசீலனை செய்யப்படுவதாக இருந்தால் ஆறு மாதங்களுக்கும்

செல்லுபடியாகும்.

கீழ்க் கண்ட காரணங்கள் தவிர மற்ற சமயங்களில் காவல் துறை இந்துச் சான்றை உங்களுக்கு வழங்க மறுக்க முடியாது:

- முதல் முறை செய்த மறு பரிசீலனை மனு நிராகரிக்கப்பட்டபின் வேறொரு மறு பரிசாலனை மனு வை அளிக்கிறீர்கள். (3.4 பார்க்கவும்)) ;
- உங்கள் சொந்த நாட்டை விட்டு வேறொரு நாட்டிற்கு உங்களை நாடு கடத்து முடிவு செய்யப்பட்டுள்ளது அல்லது ஐரோப்பிய நாட்டில் கைது செய்வதற்கான முடிவில் சலுகை அளிக்க செய்யப்பட்ட முடிவு அல்லது ஒரு சர்வ தேச குற்றவியல் நீதி மன்றத்தின் கட்டளைக்கிணங்க சலுகை வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தால்.

மேற்சொன்ன சான்று வழங்கப்பட்டபின் 21 நாட்களுக்குள் (மறு பரிசீலனை மனு செய்யப்பட்டிருந்தால் 8 நாட்களுக்குள் பகுதிகள் 3.3 மற்றும் 3.4. பார்க்கவும்), காவல் துறையால் தரப்பட்ட தஞ்சம் கோரும் விண்ணப்பத்தின் படிவத்தை OFPRA வுக்கு அனுப்ப வேண்டும் (பகுதி 3.1ல் <OFPRA வினால் பரிசோதனை> பார்க்கவும்). உங்கள் கோப்பு முழுமையாக இருந்தால் OFPRA அதைத் தபால் மூலம் ஒப்புக் கொள்ளும்.

உங்கள் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட சான்றினை புதுப்பிக்க நீங்கள் வசிக்கும் பகுதியின் காவல் நிலையத்திற்குச் செல்ல வேண்டும். இந்தச் சான்று சாதாரண வழிமுறையில் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட வழிமுறையில் 6 மாதங்களுக்குப் புதுப்பிக்கப்படும்.

ஒவ்வொரு முறை புதுப்பிக்கக் கோரும் பொழுதும் உங்கள் கோரிக்கையைப் பலப்படுத்த காவல் துறை கேட்கும் ஆவணங்களை, முக்கியமாக நீங்கள் வசிக்கும் இடத்திற்கு சான்றாக உள்ளவற்றைக் கொடுக்க வேண்டும். CNDA விடம் முறையீடு செய்துள்ளீர்கள் எனபதற்குச் சான்றாக முறையீட்டைப் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியை இணைக்க வேண்டும் ( பகுதி 3.2 வில் <தஞ்சம் சம்மந்தப்பட்ட சட்டத்தில் தேசிய நீதிமன்றத்தின் ஆய்வு> தலைப்பைப் பார்க்கவும்).

**உங்கள் இருப்பிடத்தை எப்படி நிரூபிப்பது?**

2019 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு பதியப்பட்ட தஞ்சம் கோரும் விண்ணப்பம் விஷயமாக நீங்கள் கீழ்க்கண்ட விதங்களில் உங்கள் வசிக்குமிடத்தை நிரூபிக்கலாம்:.:

- நீங்கள் தஞ்சம் கோருவோரை வரவேற்கும் மையத்தில் அல்லது தஞ்சம் கோருவோருக்கான தங்குமிடத்தில் தங்கியிருந்தால் (ஹோட்டல் போன்ற இடங்களைத் தவிர்த்து) தங்குமிடம் குறித்த அறிவிப்பைச் சமர்ப்பிப்பதன் மூலம்.:

-நீங்கள் தங்கியிருக்கும் இடத்தின் சொந்தக்காரராகவோ, வாடகைதாரராகவோ இருந்தாலோ அல்லது உங்கள் கணவன்/மனைவியினால்/ குழந்தை/ பெற்றோரால் வாடகைக்கு எடுக்கப்பட்டதோ அல்லது அவர்களுக்குச் சொந்தமானதோ என்றால் வசிப்பதற்கான சான்றைக் கொடுக்கலாம்:;

- இல்லையென்றால், நீங்கள் அதற்காக ஒதுக்கப்பட்ட முதல் நிலை மையத்தில் தங்கியிருக்க வேண்டும். அதற்கான அறிக்கையை அளிக்க வேண்டும் (பகுதி 2.1 பார்க்கவும்).
ஜனவரி 1 2019 குகி முன் பதியப்பட்ட விண்ணப்பங்களுக்கு மேற்சொன்ன விதங்களில் நீங்கள் தங்கியிருக்கலாம், அல்லது வேறு இடத்தில் தொடர்ந்து தங்கியிருக்கலாம்.

இந்த விண்ணப்பம் செய்ததின் சான்று நீங்கள் இந்நாட்டில் தங்கியிருக்கும் காலம் முழுவதும் நீங்கள் தங்கியிருப்பதற்கான உதவி பெறும் வரையில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். பொதுவாக, உங்கள் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு OFPRA வின் முடிவு அறிவிக்கப்படும் வரை அல்லது மேல் முறையீடு செய்திருந்தால் CNDA வின் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை அல்லது பொது மக்கள் மத்தியில் வாசிக்கப்படும் வரை உங்களுக்கு தங்குவதற்கான உதவி வழங்கப்படும்.

இருந்தாலும், தஞ்சம் கோரும் உங்கள் விண்ணப்பம் பெறபெபட்ட சான்று கீழ்க்கண்ட நிலைகளில் திரும்பப் பெறப்படலாம் அல்லது புதுப்பிக்கப்பட நிராகரிக்கப்படலாம்:

- OFPRA விண்ணப்பத்தை நிராகரித்து அல்லது பெற இயலாது என்று முடிவு செய்து உங்களுக்கு அறிவித்தால் இந்நாட்டில் தங்கும் உரிமைக்கு முடிவு வரும் (OFPRA அல்லது CNDA வின் நிராகரிப்பு எனும் தலைப்பில் பகுதி 5.1 இல் பார்க்கவும்)
- குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் CNDA விடம் மேல் முறையீடு சமர்ப்பிக்கப்படவில்லை என்று அறிய வந்தால் (<தஞ்சம் சம்மந்தப்பட்ட சட்டத்தில் தேசிய நீதிமன்றத்தில் ஆய்வு> என்ற தலைப்பில் பகுதி 3.2 பார்க்கவும்).

<u>கவனம்:</u>விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கான சான்று உங்களுக்கு ஐரோப்பிய ஐக்கியத்தின் மற்ற நாடுகளில் சென்று வர உங்களுக்கு உரிமை வழங்காது.

### ■ தஞ்சம் தவிர மற்ற காரணங்களுக்காகத் தங்குவதற்கு அனுமதி கோருதல்

தஞ்சம் கோரும் உங்கள் விண்ணப்பத்தின்ஆய்வில்ஃப்ரான்ஸ் நாட் உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்யு பொறுப்புடையது என்று தெரிய வந்தால் நீங்கள் தஞ்சம் தவிர மற்ற காரணங்களுக்காகத் தங்குவதற்கு அனுமதி பெற முடியும் என்று உங்களுக்கு விளக்கப்படும்.

ஒரு தகவல் அறிவிப்பு உங்களுக்கு அனுப்பப்படும். அதில் நீங்கள் எந்த காலத்திற்குள் அவ்வாறு கோரலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த காலத்திற்குப் பின், தகுந்த புதிய காரணங்களின்றி, நீங்கள் தங்குவதற்கு அனுமதி கோர முடியாது.

## 2.2.2.இரண்டாம் நிலை_: தேவைகளைக் கண்டறிதல் மற்றும் OFII (ஓஎஃப்ஐஐ) ஆல் பொறுப்பேற்றல்.

### ■ உங்களின் தனிப்பட்ட தேவைகளை உங்கள் சாளரத்தினால் கண்டறியப்படல்.

தனிப்பட்ட சாளரத்திற்கு நீங்கள் வரும் பொழுது, உங்கள் விண்ணப்பம் காவல் துறையிடம் பதியப்பட்டபின் OFII யின் அதிகாரி உங்களை நேரில் சந்தித்து உங்களை அனுமதிப்பது குறித்து உங்கள் தேவைகள் பற்றித் தெரிந்து கொள்ள உரையாடுவார்.

இந்தச் சந்திப்பு இரகசியமாக வைக்கப்படும் மற்றும் தஞ்சம் கோருவதற்கான உங்கள் நோக்கங்கள் விவாதிக்கப்படமாட்டா. உங்களுக்கு ஏதாவது சிறப்பு உதவிகள் தேவையா என்று புரிந்து கொள்ள சில கேள்விகள் கேட்கப்படும்.உங்கள் நிலைமைப்படி தேவைப்படுமானால், OFII அதிகாரி அந்த காரணங்களைக் கணக்கில் கொண்டு உங்களைத் தகுந்த தங்குமிடத்திற்கு அனுப்புவார்.

அந்தக் கேள்விகளுக்கு விடையளிப்பதோ அளிக்க மறுப்பதோ உங்கள் இஷ்டம். நீங்கள் மறுக்கும் பட்சத்தில் உங்களைத் தகுந்த தங்குமிடத்திற்கு அனுப்பாததற்கோ உங்கள் நிலைமை பற்றி OFPRA விடம் தெரியப்படுத்தாதற்கோ நிர்வாகம் பொறுப்பாகாது.

நீங்கள் ஃப்ரான்ஸுக்கு வரும் பொழுது மருத்துவ ஆவணங்களுடன் வந்திருந்தால் OFII அதிகாரி இரகசியக் கோப்பில் அந்த ஆவணத்தை OFII யின் மருத்துவருக்கு அனுப்பி வைப்பார். அவர் உங்களுக்கு ஏதாவது தனி ஏற்பாடு தேவையா

என்று முடிவு செய்வார். நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் நீங்கள் ஒரு சுகாதார மையத்திற்கு அல்லது அருகில் உள்ள மருத்துவ மனையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்படுவீர்கள்.

உங்களுக்கு ஏதாவது குறைபாடு இருப்பதாக OFII யின் அதிகாரி கருதினால் உங்கள் அனுமதியுடன் OFPRA விடம் தெரிவிப்பார். இந்தத் தகவலின் நோக்கம், தேவைக்கேற்ப,OFPRA வினால் கொடுக்கப்படும் உங்கள் விண்ணபத்தின் மீதான அறிவுரைகள் உங்கள் தேவைக்கேற்றவாறு இருக்குமாறு கவனத்தில் கொள்ளல் (உ.ம். ஊனமுற்றோருக்கான வசதிகள், அல்லது சைகை மொழியில் தகவல் பரிமாற்றம் செய்யக் கூடிய மொழுபெயரெப்பாளர் உதவி). OFPRA தேவையான ஏற்பாடுகள் பற்றி முடிவெடுக்கும்.

உடல் ஊனம் காரணமாக வேண்டும் தேவைகளை தஞ்சம் கோரும் விண்ணத்தை பரிசீலிக்கும் காலம் முழுவதும் தங்குமிடங்களில் இருக்கும் சமூக நல ஊழியர்களால் அல்லது நிர்வாக மற்றும் சமூக நல தேவைகளுக்கு உங்களுக்கு உதவ நியமனம் செய்யப்பட்ட சங்கங்களால் கவன்த்தில் கொள்ளப்படும்.

### ■ உதவி அளிக்க ஒப்பளிப்பு.

தனிப்பட்ட சாளரத்தில் சந்திப்பின் பொழுது OFII உங்களுக்கு உதவிக்கான சூசனையை முன் வைக்கும். இதன் மூலம் இந்த நாட்டில் அகதி என்ற முறையில் உங்களுக்கு உரித்தான அனைத்து உதவிகளும் கிடைக்க ஏதுவாக இருக்கும்.

உங்களுக்கு சாளரத்தில் கொடுக்கப்படும் உதவியளிக்கும் ஒப்புதல் ஆவணம் உங்கள் குடும்ப அமைப்பை விவரிக்கிறது. இது உங்கள் உரிமைகளை நிர்ணயிக்க உதவும். இந்த ஆவணம் OFII யினால் ஒரு குழந்தை பிறக்கும் பொழுதோ அல்லது பெற்ஓறருடன் சேரும் பொழுதோ புதுப்பிக்கப்படுகிறது. அதனால் வரவேற்பிற்கான உரிமைகள் பற்றி நிர்ணயிக்க முடியும்.

இந்தக் கையேட்டின் பகுதி 4 இல் குறிப்பிட்டுள்ளபடி, அனுமதிக்கும் நிபந்தனைகளின்படி உங்களுக்கு கீழ்க்கண்ட உரிமைகள் உண்டு :

- உங்களுக்கு ஏற்கனவே ஒரு தங்குமிடம் இல்லாமலிருந்து நீங்கள் உதவி கோரியிருந்தால் ஒரு தங்குமிடத்திற்கு வழி காட்டப்படுவீர்கள் ( <தஞ்சம் கோருவோருக்கான தங்குமிடம்>தலைப்பில் பகுதி 4.1 பார்க்கவும்). ;
- சட்டத்தினால் தடை செய்யப்பட்டிருந்தாலொழிய தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகை வழங்கப்படும் (<தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகை>தலைப்பில் பகுதி 4.2 பார்க்கவும்).

ஒரு பிராந்தியத்தில் தங்குமிடத்தில் இடம் இல்லையென்றால் OFII உங்களை வேறொரு பிராந்தியத்திற்கு அனுப்பலாம். உங்கள் விண்ணப்பம் பரிசீலனை செய்து முடிக்கும் வரை நீங்கள் அங்கு தங்கியிருக்க வேண்டும். < தஞ்சம் கோருவோருக்கான தங்குமிடம் >எனும் தலைப்பில் பகுதி 4.1 பார்க்கவும்).

## 2.3. தனிப்பட்ட சாளரத்தில் சந்தித்தபின் உதவி

தனிப்பட்ட சாளரத்திற்குச் சென்றபின், உங்கள் தங்குமிடத்தில் உதவி அளிப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும், அது தஞ்சம் கோருவோருக்கான வரவேற்பு மையமாக இருந்தாலோ அல்லது (CADA), அல்லது ஒரு நிலையான (ஹோட்டல் அல்லாத) அவசர கால தங்குமிடமாக இருந்தாலோ எதுவாக இருந்தாலும் சரி.

அந்த மாதிரி ஒரு இடத்தில் நீங்கள் தங்க வைக்கப்படாவிட்டால் உங்களுக்கான உதவி OFIIஉங்களை அனுப்பும் முதல் நிலை வரவேற்பு மையத்தினால்(SPADA) உறுதி செய்யப்படும். ( பகுதி 2.1 பார்க்கவும்).

இந்த சமூக. சட்ட மற்றும் நிர்வாக ரீதியான உதவியில் முக்கியமாக உங்களுக்கு ஒரு விலாஸம் அமைத்தலும் சேரும் (பகுதி 2.2.1 இல் தலைப்பு <உங்கள் வசிப்பிடத்தை எப்படி நிரூபிப்பது? >பார்க்கவும்).மேலும் உங்களு விண்ணப்பத்தின் பரிசோதனையில் அது ஃப்ரான்ஸ் நாட்டின் பொறுப்பு என்று தெரிய வந்தால் நீங்கள் OFPRA விடம் கொடுக்க வேண்டிய தஞ்சம் கோரும் விண்ணப்பத்தின் கோப்பைத் தயார் செய்வதும் சேரும்.

<u>கவனம்:</u> : நீங்கள் SPADAவில் தங்கியிருந்தால், SPADAவினால் கொடுக்கப்பட்ட அறிவுரைகளின்படி உங்கள் தபாலை அவ்வப்பொழுது தேடிச் செல்வது உங்கள் பொறுப்பாகும்.

# 3. தஞ்சம் கோரும் விண்ணப்பத்தின் நிபந்தனைகள்

உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தின் பரிசோதனை ஃப்ரான்ஸ் நாட்டின் பொறுப்பு என்று கண்டறியப்பட்டால் தஞ்சம் வழங்குவதற்கான சட்டம் சம்மந்தப்பட்ட தேசிய நீதி மன்றத்தின் கீழ் இயங்கும் அகதிகள் மற்றும் நாடற்றோருக்கான பாதுகாப்பு வழங்குவதற்கான ஃப்ரான்ஸ் நாட்டு அலுவலகத்தினால் பரிசோதிக்கப்படும்.

## 3.1.ஃப்ரான்ஸ் நாட்டின் அகதிகள் மற்றும் நாடற்றோர் பாதுகாப்பு அலுவலகத்தின் மூலம் பரிசோதனை(OFPRA).

உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதியும் பொழுது காவல் துறை உங்களிடம் ஒரு தஞ்சம் கோரும் படிவத்தைக் கொடுத்திருக்கும். அதை நீங்கள் பூர்த்தி செய்து OFPRAவிடம் அதைப் பரிசோதனை செய்து ஒரு முடிவெடுக்க ஏதுவாக இருக்கும்.

OFPRA வின் எதிர் மறையான முடிவுக்கு மேல் CNDA விடம் மேல் முறையீடு செய்ய முடியும். ( பகுதி 3.2 வில் ‘தஞ்சம் வழங்குவதற்கான சட்டம் சம்மந்தப்பட்ட தேசிய நீதி மன்றத்திடம்’ முறையீடு செய்ய முடியும்)

*உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் சமயத்தில் உங்களுக்கு எந்த விதமான பாதுகாப்பு வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை (அகதி என்ற தகுதியோ அல்லது இரண்டாம் நிலை பாதுகாப்போ). அது ஒரு தனிப்பட்ட நடைமுறை. அதில் உங்கள் விண்ணப்பம் OFPRA வினால் முதலில் அகதி என்ற விதத்திலும் பிறகு உங்கள் நிலைமையில் தேவைப்பட்டால் இரண்டாம் நிலை பாதுகாப்பு என்ற விதத்தில் பரிசோதிக்கப்படும்.*

### ■ OFPRAஓஎஃப்பீஆர்ஏ படிவம் பூர்த்தி செய்தல்.

**இந்தப் படிவம் ஃப்ரெஞ்சு மொழியில் நிரப்பப்பட வேண்டும்**, கையொப்பமிடப்பட்டு அதனுடன் கூட அமலில் உள்ள தஞ்சம் கோரிய விண்ணப்பத்தின் ஒப்புதல் சான்று, இரண்டு புகைப்படங்கள் அடையாளத்திற்காக மற்றும் உங்களிடம் இருக்கும் ஏதேனும் பயணத்திற்கான ஆவணம் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

உங்கள விண்ணப்பம் துரிதப்படுத்தப்பட்ட நடையுறையில் எடுத்துக் கொள்ளப்பட்டால் விண்ணப்பத்தைப் பதிவு செய்யும் பொழுது உங்களிடம் கொடுக்கப்பட்ட நோட்டீஸின் நகலையும் இணைக்க வேண்டும்.

OFPRA வினால் உங்கள் விண்ணப்பம் பதியப்பட வேண்டும் என்றால் மேற்கண்டவை அவசியம். .

உங்களுடன் வந்திருக்கும் மைனர் குழந்தைகளுக்கு ஏதேனும் ஆபத்து இருந்தால் அதைப்பற்றி உங்கள் படிவத்தில் குறிப்பிடுவது நல்லது. இரு பெற்றோருமே தஞ்சம் கோருபவர்களாக இருந்தால் குழந்தையின் நிலைமை பற்றி தாயின் படிவத்தில் குறிப்பிடப்படும்.

*உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் அனைத்துத் தகவல்களும் இரகசியமாகவே பாதுகாக்கப்படும். எந்தக் காரணத்திற்காகவும் உங்கள் தாய் நாட்டு அதிகாரிகளிடம் தெரிவிக்கப்படமாட்டாது.*

### ■ OFPRAஓஎஃப்பீஆர்ஏ உக்குக் கோப்பை அனுப்புதல்.

உங்கள் கோப்பு முழுமையாகிய பின் அதை உங்கள் விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கான சான்று வழங்கப்பட்டதிலிருந்து **நீங்கள் அதிக பட்சம் 21 நாட்களுக்குள்,** (திரும்பவும் பரிசோதிக்கக் கோரியிருந்தால் 8

நாட்களுக்குள் – பகுதி 3.3. – மூடப்பட்ட விண்ணப்பத்தை மறுபடியும் திறத்தல் – அல்லது மறு பரிசீலனை – பகுதி 3.4 மறு பரிசீலனை பார்க்கவும்) அனுப்ப வேண்டும்.

கீழ்க்கண்ட விலாஸத்திற்குத் தபால் மூலம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும் :

OFPRA
201, rue Carnot
94136 FONTENAY-SOUS-BOIS CEDEX

உதாரணத்திற்கு, உங்கள் விண்ணப்பச் சான்று ஜனவரி 10 ஆம் தேதி வழங்கப்பட்டிருந்தால் நீங்கள் உங்கள் கோப்பை OFPRA வுக்கு அதிக பட்சம் 31 ஜனவரிக்குளு அனுப்பியிருக்க வேண்டும். அதற்கு அத்தாட்சி தபால் முத்திரையாகும்.

உங்கள் கோப்பை 'பெற்றுக் கொண்டதற்கான ரசீதுடன் கூடிய பதிவுத் தபாலில்' அனுப்புமாறு பரிந்துரைக்கப்படுகிறது. உங்கள் பெயரைத் தெளிவாக <அனுப்புனர்> என்ற இடத்தில் குறிப்பிடவும்.

உங்கள் கோப்பு முழுமையடையாமல் இருந்தால்,OFPRA உங்களுக்கு அதைத் திருப்பி அனுப்பும். அப்பொழுது உங்களுக்குக் கூடுதலாக 8 நாள் அவகாசம் தரப்படும் (மறு பரிசோதனைக்குக் கோரியாருந்தால் 4 நாட்கள்). இந்தக் காலத்திற்குள் நீங்கள் அனுப்பாவிட்டால் OFPRAஉங்கள் விண்ணப்பத்தை மூடிவிடும். உங்களுக்கு உதவி பெறும் உரிமை முடிவுக்கு வரும் மற்றும் விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி புதுப்பிக்கப்படமாட்டாது.

உங்கள் விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும் காலத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் OFPRA விற்குக் கூடுதல் ஆவணங்களைத் தபால் மூலம் அனுப்பலாம். OFPRAவிற்கு அனுப்பிய மற்றும் அங்கிருந்து பெற்றுக் கொண்ட அனைத்துத் தபால்களுக்கும் நகல் மற்றும் தபால் அனுப்பியதற்கும் மற்றும் பெற்றுக் கொண்டதற்கும் அத்தாட்சிகளை வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். OFPRA.விற்கு அனுப்பும் அனைத்துத் தபால்களிலும் உங்களுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்ப அறிமுகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோப்பு எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

***விண்ணப்ப நடைமுறையின் பொழுது விலாஸம் மாற்றுகிறீர்களா?***

*OFPRAவிடம் நீங்கள் தங்குமிடத்துடன் சம்மந்தப்பட்ட, உங்கள் விலாஸத்திலிருந்து மாறுபட்ட இடத்தைக் குறிப்பிட்டிருந்து தங்குமிடத்தை நீங்கள் மாற்றினால் அதைப் பற்றி OFPRAவுக்குக் கூடிய சீக்கிரம் தகவல் தெரிவிக்க வேண்டியது மிக அவசியம், முடிந்தால் இதற்காக வைக்கப்பட்டுள்ள, OFPRAவின் (www.ofpra.gouv.fr) இணைய தளத்தில், 'இணைய தள நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி சேவை மூலம் செய்யவும். தன்னிடம் உள்ள உங்கள் கடைசியாக் கொகடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு தான், சந்திப்புக்கான அழைப்புகள் மற்றும் உங்கள் விண்ணப்பத்தின் மீதான தன் முடிவுகளைப்பற்றிய தன் தபால்களை OFPRA உங்களுக்கு அனுப்பும்.*

*நீங்கள் உங்கள் சொந்த இடத்திலோ அல்லது உங்கள் வாடகை இடத்திலோ அல்லது உங்கள் துணைவர் அல்லது குழந்தை அல்லது பெற்றோருக்குச் சொந்தமான அல்லது அவர்களால் வாடகைக்கு எடுக்கப்பட்ட இடத்தில் இருந்து உங்கள் விலாஸத்தை நீங்கள் மாற்றினால் நீங்கள் OFII க்குத் தகவல் அளிக்க வேண்டும். .*

## ■ OFPRAஓஎஃப்பீஆர்ஏ இலிருந்து விண்ணப்பம் பெறப்பட்டதற்கான அத்தாட்சி.

உங்கள் கோப்பு முழுமை பெற்று குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பப்பட்டிருந்தால் OFPRA உங்களுக்கு ஒரு தபால் அனுப்பும். அதில் அலுவலகத்திடம் உங்கள் விண்ணப்பம் வந்தது பற்றிக் குறிப்பிட்டு உங்கள் கோப்பி எண்ணைக் குறிப்பிட்டு இருக்கும்.

இதுவே உங்கள் விண்ணப்பம் OFPRA விடம் சமர்ப்பிக்கப்பட்தற்குச் சான்றாகும்..

இதுதான் உங்கள் முதல் விண்ணப்ப அத்தாட்சியைப் புதுப்பிக்க உதவும் (பகுதி 2.2.1 தலைப்பு <விண்ணப்பம் பெற்றுக் கொண்ட அத்தாட்சி வழங்குதல்> பார்க்கவும்).

சமயங்களில், சந்திப்பிற்கான அழைப்பு அதே நேரத்தில் அனுப்பப்படலாம். இந்த அழைப்பு அந்தக் கடிதத்தின் பின் பக்கம் காணப்படும். கடிதத்தின் பின் புறம் அழைப்பு இல்லையென்றால் அது தனியாக பிறகு வேறொரு தபாலில் அனுப்பப்படும்.

## சாதாரண முறை மற்றும் துரித முறையில் விண்ணப்பத்தைப் பரிசோதித்தல்.

உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் OFPRAவினால் சாதாரண அல்லது துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் பரிசோதிக்கப்படும்.

பகுதி 2.2.1 இல் ( தலைப்பு < உங்கள் விண்ணபத்தின் தேர்வு>), விண்ணபத்தைப் பரிசீலிக்கும் காலம் 15 நாட்களாகக் குறைக்கப்படும் ஆனால் சாதாரண நடைமுறையில் கொடுக்கப்படும் அதே உத்தரவாதங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். தனிப்பட்ட சாளரத்தில் உங்கள் விண்ணப்பம் துரிதப்படுத்தப்படுகிறது என்று பதியப்பட்டிருந்தால் அது OFPRA வினால் துரிதப்படுத்தப்பட்ட முறையில் எடுத்துக கொள்ளப்படும். OFPRA உங்கள் கோப்பின் பின்னணியில் அல்லது உங்கள் நிலைமை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, நீங்கள் இங்கிருப்பது பொது அமைதிக்கோ பொதுப் பாதகாப்பிற்கோ அல்லது தேசிய பாதுகாப்பிற்கோ குந்தகம் விளைவிக்கக்கூடியது என்றில்லாமல் இருந்தால், எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணபத்தைச் சாதாரண நடைமுறைக்கு மாற்றலாம்.

கீழ்க்கண்ட நிலைகளில் OFPRA துரித முறையில் பரிசோதிக்க முடிவு செய்யலாம்::

- OFPRA வைத் தவறிழைக்கத் தூண்டும் வகையில் நீங்கள் தவறான ஆவணங்களைக் கொடுத்தள்ளீர்கள், தவறான தகவல்களைக் கொடுத்துள்ளீர்கள் அல்லது தகவல்களை அல்லது ஆவணங்களை மறைத்துள்ளீர்கள்;
- வேறு பெயர்களில் மேலும் பல விண்ணபங்களைச் செய்துள்ளீர்கள் ;
- உங்கள் விண்ணப்பத்திற்காக நீங்கள் பாதுகாப்பிற்குச் சம்மந்தம் இல்லாத கேள்விகளை எழுப்பியுள்ளீர்கள் ;
- உங்கள் அறிக்கைகள் சம்மந்தமில்லாதவை, எதிர் மறையானவை, தவறானவை அல்லது நடைமுறைக்கு ஒவ்வாதவை மற்றும் உங்கள் நாட்டைப்பற்றி இந்த அலுவலக்த்திற்குத் தெரிந்தவற்றிற்கு எதிரானவை.

துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் உங்கள் விண்ணப்பம் வைக்கப்பட்டதை நீங்கள் எதிர்க்க விரும்பினால் CNDA வில் உங்கள மேல் முறையீட்டின் பொழுது மட்டுமே செய்ய முடியும்.

## OFPRAஓஎஃப்பீஆர்ஏ வில் நேர்முகம்.

உங்கள் விண்ணபம் OFPRAவிடம் சமர்ப்பிக்கப்பட்டதும் நேர்முகச் சந்திப்பிற்காக உங்களுக்கு ஒரி அழைப்பு அனுப்பப்படும்.

இந்த நேர்முகச் சந்திப்பில் இருந்து இரண்டு சமயங்களில் மட்டும் விலக்களிக்கப்படும் :

- உங்கள் கோப்பில் நீங்கள் கொடுத்துள்ள தகவல்கள் அடிப்படையில் OFPRA உங்களுக்கு அகதி எனும் அந்தஸ்தை அளிக்கப் போதுமானவையாக உள்ளன.;
- மருத்துவ ரீதியான காரணங்கள், நீடித்தவை மற்றும் உங்கள் விருப்பத்தில் இருந்து சுதந்திரமானவை நேர் முக சந்திப்பில் பங்கு கொள்ளத் தடையாக இருக்கின்றன.

உங்களை ஒரு நேர் முகச் சந்திப்பிறகு அழைத்திருந்தால் நீங்கள் Fontenay-sous-Bois வில் உள்ள OFPRA வின் அலுவலகத்திற்கு வர வேண்டும். அங்கு நீங்கள் <பாதுகாப்பு அலுவலர்> என்றழைக்கப்படும் OFPRA வின் அதிகாரியைச் சந்திப்பீர்கள். தேவைப்பட்டால் OFPRA வினால் ஏற்பாடு செய்யப்பட்ட, தனிப்பட்ட சாளரத்தில் விண்ணபத்தைப் பதியும் பொழுது நீங்கள் தேர்வு செய்த மொழி அல்லது உங்களுக்குத் தேவையான அளவு தெரிந்துள்ள மொழி அறிந்த மொழி பெயர்ப்பாளர் உடனிருப்பார். (தலைப்பு < OFPRA வில் சந்திப்பின் போது மொழித் தேர்வு> பகுதி 2.2.1 இல் பார்க்கவும்). நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஃப்ரெஞ்சு மொழியில் பேசலாம். இந்தச் சந்திப்பின் போது உபயோகிக்கும் மொழித் தேர்வை எதிர்த்து CNDA வில் செய்யும் மேல் முறையீட்டில் மட்டும் தான் விண்ணப்பிக்க முடியும்.

**நீங்கள் அந்த நேர் காணலுக்குச் செல்லவில்லையென்றால் நீங்கள் இல்லாமை காரணமாக OFPRA உங்கள் விண்ணபத்தின் மீது கோப்பில் உள்ள தகவல்களின் பேரில் முடிவெடுக்கலாம் அல்லது அதை முடிவுக்குக் கொண்டு வரலாம்.**. ஆகவே, வர முடியாத சந்தர்பத்தில் OFPRA வுக்கு குறைந்த பட்சம் 48 மணி நேரத்திற்கு முன்னால் தெரிவிக்க வேண்டும் அல்லது அனைத்துக் கால தாமதத்திற்கும் உங்கள் அழைப்பில் காணும் விலாஸத்திற்கு மெயில் அனுப்ப வேண்டும்.

நீங்கள் விரும்பினால் உங்களுடன் இந்த நேர் காணலுக்கு ஒரு வழக்கறிஞரையோ அல்லது OFPRAவினால் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் உறுப்பினரையோ அழைத்து வரலாம். அவர்கள் நேர் காணலுக்குப் பின் தேவையான விவரங்களைத் தொகுக்க உதவுவார்கள். அந்த வழக்கறிஞரோ அல்லது சங்க உறுப்பினரோ நேர்காணலுக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வரவில்லையென்றால் ச்ந்திப்பு ஒத்தி வைக்கப்படமாட்டாது. உங்களுக்கு ஏதாவது உடல் ஊனமிருந்தால் நேர் காணலின் போது உங்களுக்கு வழக்கமாக உதவும் மருத்துவ உதவியாளர் அல்லது ஊனமுற்றவர்களுக்கு உதவும் சங்கத்தின் பிரதிநிதியை உடனிருக்கக் கோரலாம்.

நீங்கள் விரும்பினால், உங்கள் விண்ணப்பத்தின் பாலியல் நோக்கம் காரணமான விஷயங்களை விளக்க முக்கியமாகப் பாலியல் கொடுமை பற்றி, விவரிக்க நேர் காணல் உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலக பிரதிநிதி அல்லது பாலியல் விவரங்களை விளக்கக்கூடிய நிபுணரின் முன்னிலையில் நடக்க வேண்டும் என்று கோரலாம். இதை நீங்கள் தேர் காணல் தினத்தன்று OFPRA விடம் முன் கூட்டியே தெரிவிக்கலாம்.

**நேர் காணல் இரகசியமானது.** நீங்கள் சமர்ப்பிக்கும் தகவல்கள் சந்திப்பு அறிக்கையில் உங்களைச் சந்தித்த பாதுகாப்பு அதிகாரியால் சேர்க்கப்படும். நீங்கள் விரும்பினால், (சாதாரண நடவடிக்கையில்) ஒரு முடிவெக்கும் முன்பேயோ அல்லது (துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில்) அதிக பட்சம் முடிவெடுக்கும் சமயத்திலேயோ உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

இந்த நேர்காணல் ஒலிப்பதிவுக்கும் உள்ளாகும். ஆனால் இந்தப் பதிவு உங்களுக்கு OFPRA வின் எதிர் மறையான முடிவாக இருந்தால் மட்டுமே மேல் முறையீடு செய்வதற்காக உங்களுக்கு அளிக்கப்படும்.

Fontenay-sous-Bois *வில் உள்ள* OFPRA *வின் அலுவலகத்தைத் தவிர வேறெங்காவது நேர்காணல் நடக்கலாமா ?*

*நீங்கள் அதிகத் தொலைவில் இருந்தால் (குறிப்பாக நீங்கள் கடல் தாண்டி இருந்தால்) அல்லது உங்கள் சிறப்பான நிலைமையினால் (உடல் நிலை அல்லது குடும்பக் காரணங்களுக்காகவோ உங்களால் பயணம் செய்ய முடியவில்லையென்றால் அல்லது காவலில் வைக்கப்பட்டிருந்யால்), நேர்காணல்* Fontenay-sous-Bois *வில் இல்லாமல் தொலைக்காட்சி நேர் காணல் மூலம் நடைபெறும்.*

*அந்தச் சமயத்தில், உங்களுக்கு உதவும் வழக்கறிஞர் அல்லது சங்கத்தின் பிரதிநிதி சாதாரணமாக உங்களுடன் இருப்பார். மொழி பெயர்ப்பாளர் பாதுகாப்பு அதிகாரியுடன் இருப்பார்.*

*நீங்கள் சில சமயங்களில் கடல் கடந்த சில இடங்களில் அல்லது சில் உள்நாட்டுப் பகுதிகளில் இருந்தாலும் நீங்கள் ஒரு* OFPRA *அதிகாரியை நேரில் சந்தித்து உங்கள் பதில்களைத் தர முடியும். அது நீல்கள் கயானாவில் வசித்தால்* Cayenne *நகரத்தில் உள்ள* OFPRA *வின் அலுவலகத்திலோ அல்லது வேறு பிரதேசங்களில்* OFPRA *வின் அறிவுரைப்படயோ நடக்கலாம்.*

## ■ மருத்துவப் பரிசோதனை.

OFPRA உங்களை மருத்துவப் பரிசோதனைக்குச் செல்ல வேண்டலாம். இந்த மருத்துவப் பரிசோதனைக்குச் செல்ல மறுப்பது காரணமாக உங்கள் விண்ணப்பம் பூர்த்தி அடையவில்லை என்று கருத முடியாது. OFPRA தன் முடிவை அறிவிப்பதிலிருந்து தடுக்க முடியாது. நீங்கள் ஒரு மைனராக இருந்தால், உங்கள் பெயரில் பாலின உறுப்புச் சேதம் ஏற்படக்கூடும் எனகிற பயத்தின் காரணமாக தஞ்சம் கோரி விண்ணப்பிக்கப்பட்டிருந்தால் இந்தப் பரிசோதனைக்கான செலவு OFPRA வினால் ஏற்றுக் கொள்ளப்படும். மருத்துவர் மருத்துவச் சான்றிதழை நேரடியாக OFPRA வுக்கு அனுப்புவார் மற்றும் ஒரு நகலை உங்கள் பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பிரதிநிதியிடம் கொடுப்பார்.

## ■ OFPRAவின் முடிவு.

### ✓ காலக் கெடுக்கள்

OFPRA வின் முடிவைப் பெறுவதற்கான காலக் கெடு மாறுபடும்.: பொதுவாகத் துரித்ப்படுத்தப்பட்ட நடைமுறையில் 15 நாட்களும், சாதாரண நடைமுறையில் சில மாதங்களும் ஆகலாம். OFPRA வின் நீண்ட மௌனத்திற்கு உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்ற அர்த்தம் இல்லை. OFPRA வினால் 6 மாதங்களுக்குள் முடிவெடுக்க முடியவுல்லையென்றால் அவர்கள் தபால் மூலம் உங்களுக்குத் தகவல் அளிப்பார்கள். ஆகவே நீங்கள் உங்கள் தபாலைக் கவனித்து வர வேண்டும்.

✓ **சாதகமான முடிவு** (பகுதி 1 இல் <பாதுகாப்பின் வகைகள்> பார்க்கவும்)

உங்கள் விண்ணப்பத்தின் மீது சாதகமான முடிவெடுக்கப்பட்டால் நீங்கள்::

- **அகதியாக அங்கீகரிக்கப்படுவீர்கள்** மற்றும் OFPRA உங்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டதைத் தெரிவிக்கும் ;
- **இரண்டாம் நிலை பாதுகாப்புக்கு உரியவராவீர்கள்** மற்றும் OFPRA உங்களுக்கு இரண்டாம் நிலை பாதுகாப்பு வழங்கப்பட்டதை உறுதி செய்து தபால் அனுப்பும் மற்றும் நிர்வாகத்திடம் உங்கள் பாதுகாப்பை நிரூபிக்க ஒரு தபாலையும் அனுப்பி வைக்கும்.

✓ **சாதகம் இல்லாத முடிவு**

OFPRA உங்கள் விண்ணப்பத்தின் மீது மூன்று விதமான சாதகமற்ற முடிவுகளை எடுக்கலாம் :

- **நிராகரிக்கும் முடிவு ;**

இந்த முடிவுக்கு எதிராக நீங்கள் CNDAவில் மேல் முறையீடு செய்யலாம். நாட்டில் உங்களை வைத்திருப்பது பற்றிய நிபந்தனைகளை பகுதி 3.1 இல் தலைப்பு < OFPRAவின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் உதவிக்கு முடிவு.> பார்க்கவும்.

- **பெற்றுக் கொள்ள முடியாமை** முடிவு :

- ஏற்கனவே ஒரு ஐரோப்பிய ஐக்கியத்தைச் சார்ந்த நாட்டில் அகதி என்ற முறையில் பாதுகாப்புப் பெற்று வருகிறீர்கள்;
- ஒரு மூன்றாம் நாட்டில் நீங்கள் அகதி அந்தஸ்தைப் பெற்றுள்ளீர்கள் மற்றும் உங்களால் அங்கு மீண்டும் திரும்பிச் செல்ல முடியும்.

இந்த முடிவுக்கு எதிராக நீங்கள் CNDAவில் மேல் முறையீடு செய்யலாம். உங்களுக்கு நாட்டில் இருக்கும் உரிமை தொடராது, நீங்கள் CNDA வில் மேல் முறையீடு செய்திருந்தாலும். (பகுதி 3.1 இல் தலைப்பு < OFPRAவின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் உதவிக்கு முடிவு.> பார்க்கவும்).

- **விண்ணப்பத்தை மூடுவதற்கான முடிவு** எடுகப்கப்படலாம்:

- OFPRA விடம் நீங்கள் நேர் காணல் சமயத்திலோ அல்லது தபால் மூலமாகவோ உங்கள் விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்தால்;
- 21 நாள் காலக் கெடுவிற்குள் உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவில்லை அல்லது நேர் காணலுக்கு நீங்கள் வரவில்லை;;
- உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கத் தேவையான தகவல்களை வேண்டுமென்றே தர மறுக்கிறீர்கள் ;
- உங்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை, சரியான நேர்த்திறகுள் அலுவலகத்திற்கு உங்கள் விலாஸத்ததை தெரிவிக்கவில்லை.
- உங்கள் விண்ணப்பம் தனிப்பட்ட சாளர்த்தில் பதியப்பட்டுவிட்டது ஆனால், தகுந்த காரணமில்லாமல் உங்கள் கோப்பை நீங்கள் OFPRA அலுவலகத்திற்கு அனுப்பவில்லை. .

இந்த முடிவுக்கு எதிராக நீங்கள் CNDA வில் இல்லை நிர்வாக ஆணையத்திடம் முறையீடு செய்யலாம். உங்களுக்கு நாட்டில் இருக்கும் உரிமை தொடராது, நீங்கள் CNDA வில் மேல் முறையீடு செய்திருந்தாலும். (பகுதி 3.1 இல் தலைப்பு < OFPRAவின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் உதவிக்கு முடிவு.> பார்க்கவும்). நீங்கள் விண்ணப்பம் மூடப்பட்டதற்கான முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 9 மாதங்களுக்குள் உங்கள் கோப்பைத் திரும்ப்ப பரிசீலனை செய்யக் கோரலாம். (பகுதி 3.3 பார்க்கவும்). .

✓ **OFPRAமுடிவை அனுப்பும் முறைகள்**

**OFPRA**உங்களுக்கு தன் முடிவை ஃப்ரெஞ்சு மொழியில் எழுதி அனுப்பும். மேலும் ஒரு ஆவணத்தை உங்களுக்குப் புரியும் என்று நம்பப்படும் மொழியில் அனுப்பி வைக்கும். அதில் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால் அதைப பற்றி விளக்கி இருக்கும்.

***OFPRA உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதற்கான சான்று, நேர்காணலுக்கு வரச்சொல்லும் அழைப்பு மற்றும் அதன் முடிவை உங்களுக்கு மின்னணுவியல் மூலம் தெரிவிக்கலாமா?***

OFPRA *ஒரு தனிப்பட்ட கணக்கு மூலம் மின்னணுவியல் வழியாக உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதற்கான சான்று, நேர்காணலுக்கு வரச்சொல்லி அழைப்பு மற்றும் அதன் முடிவு ஆகியவற்றை அனுப்புவதற்கான ஏற்பாட்டை உருவாக்கியுள்ளது. பாதுகாப்பான இந்த முறை தஞ்சம் கோரும் விண்ணப்பம் முழுமையாக இரகசியமாகப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது.*

*இந்த முறை உங்களுக்குக் கையாளப்பட்டால் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பதியும் பொழுதோ அல்லது பிரிவு 2.2.1ல் குறிப்பிட்டுள்ளபடி உங்கள் <டப்ளின்> நடவடிக்கை முடிவுக்கு வராமல் இருந்தால் உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்யும் பொறுப்பு ஃப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்தது என்று முடிவு செய்யப்பட்டு அந்நாட்டிற்கு மாற்றும் பொழுது உங்ளுக்குத் தெரிவிக்கப்படும்.*

## ■ OFPRAவின் முடிவுக்கு எதிரான முறையீடு

OFPRA வின் முடிவுக்கு எதிராக நீங்கள் CNDA வில் மேல் முறையீடு செய்ய முடியும் இதை நீங்கள் அந்த முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள் செய்ய வேண்டும் ( தலைப்பு<CNDA வினால் பரிசோதனை> பகுதி 3.2 வில் பார்க்கவும்). நீங்கள் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முறையீடு செய்யவில்லையென்றாலோ அல்லது ஒரு மாத்த்திற்கு மேல் செய்தாலோ நாட்டில் நீங்கள் தங்கியிருக்கக் கொடுக்கப்பட்ட உரிமை முடிவுக்கு வரும், உங்கள் விண்ணப்பத்தின் மீதான பதிவு திரும்பப்பெறப்படும் அல்லது புதுப்பிக்கப்படமாட்டாது. நீங்கள் உடனடியாக ஃப்ரான்ஸ் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

நீங்கள் CNDAவில் மேல் முறையீடு செய்வதற்கு சட்டம் சம்மந்தப்பட்ட உதவி பெற விரும்பினால் அதற்கான கோரிக்கையை நீங்கள் OFPRA வின் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஒரு மாத காலக் கெடு நிறுத்தி வைக்கப்பட்டு உங்கள் சட்ட உதவி கோரும் விண்ணப்பத்தின் மீதான முடிவு உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து மீண்டும் கணக்கிடப்படும் தலைப்பு <வழக்கறிஞரின் உதவி > பகுதி 3.2 பார்க்கவும்).

CNDAவின் முடிவு உங்களால் அல்லது OFPRAவினல் தேசிய சபைக்கு முன்னால் மேல் முறையீட்டிற்கு ஆளாகலாம்.

## ■ OFPRAவின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் உதவிக்கு முடிவு

பொதுவாக, தஞ்சம் கோரும் உங்கள் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் காலம் முழுவதும், சட்ட ரீதியான முறையீடு உட்பட, நாட்டில் தங்கியிருக்க உங்களுக்கு உரிமை உண்டு.

எனினும், இந்த உரிமை OFPRA வின் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு முடிவு உங்கள் மீது எடுக்கப்பட்டால், முடிவுக்கு வரும்:

1. உங்களுக்கு வேறு ஒரோ நாட்டில் பாதுகாப்பு கிடைக்கிறது மற்றும் அந்ந்த நாட் ஐக்கிய ஐரோப்பாவில் உறிப்பினர் இல்லை என்ற காரணத்தினால் நீங்கள் அந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்ல முடியும் என்கிற காரணத்தினால் அனுமதிப்பட முடியாமை. (பகுதி 3.3).;
2. விண்ணப்பத்தை மூடுவதற்கான முடிவு (பகுதி 3.3 பார்க்கவும்.);
3. துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் உள்ள விண்ணப்பம், நீங்கள் ஒரு நிலையான நாட்டிலிருந்து வருகிறீரகள் என்பதால் தள்ளுபடி செய்யப்படுதல்
4. துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் உள்ள விண்ணப்பம் நீங்கள் நாட்டில் இருப்பதால் பொது அமைதிக்குப் பங்கம் விளையும் என்பதால் தள்ளுபடி செய்யப்படுதல்
5. ஏற்றுக் கொள்ளக் கூடியது என்று கருதப்பட்ட மறு பரிசீலனை மனு தள்ளுபடி செய்யப்படுதல் ;
6. முதல் முறை மறு பரிசீலனை கோரிக்கையில் ஏற்றுக் கொள்ள முடியாத நிலை;
7. உங்களை நிர்வாக அல்லது சட்ட ரீதியான பிரதேசத்திலிருந்து வெளியேற்றும் முடிவின் விளைவாக வீட்டுக் காவலில் அல்லது சிறையில் வைக்கப்பட்டுள்ளீர்கள் என்ற காரணத்தினால் மனு ஏற்றுக்

கொள்ளப்பட முடியாத நிலை ( தலைப்பு <நீங்கள் வெளியேற்றப்படுபவரா அல்லது நிர்வாகம் அல்லது நீதி மன்றத்தினால் நாட்டினுள் நுழைய தடை விதிக்கப்பட்டவரா?> பகுதி 2.2.1 இல் பார்க்கவும்).

அப்படிப்பட்ட நிலையில், விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கான சான்று உங்களிடமிருந்து திரும்ப பெற்றுக் கொள்ளப்படும் அல்லத் புதுப்பிக்கப்படமாட்டாது, மேலும் ஃப்ரான்ஸ் நாட்டு எல்லையை விட்டு வெளியேற வேண்டிய தீர்மானம் உங்ளுக்கு எதிராக எடுக்கப்படலாம் (பகுதி 5 பார்க்கவும்).

## 3.2.CNDA மூலம் பரிசோதனை.

### ■ முறையீட்டுக்கான கால அவகாசம்.

OFPRA வினால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதென்று அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீங்கள் CNDA வில் முறையீடு செய்யலாம் :

- விண்ணபத்தைப் ஏற்றுக் கொள்ள முடியாது அல்லது நிராகரிக்கப்பட்டது என்று OFPRA வின் முடிவு வந்தால் நீதிமன்றத்திடம் முடிவை ரத்து செய்யவோ பாதுகாப்பு கோரியோ முறையிடலாம்;
- இரண்டாம் நிலை பாதுகாப்பு அளிப்பதாக முடிவு செய்யப்பட்டால் அகதி என்று அங்கீகரிக்கக் கோரலாம். அந்த நிலையில் உங்களுக்கு இரண்டாம் நிலை பாதுகாப்பு மற்றும் உரிமைகள் CNDA வினால் அகதி என்ற அங்கீகாரம் அளிக்கப்படும் வரை தொடரும் (தலைப்பு <பாதுகாப்புப் பெறும் நபரின் உரிமைகள் > பகுதி 6 இல் பார்க்கவும்). மேலும், CNDA உங்களுக்கு அகதி என்ற அந்தஸ்தைத் தரவில்லையென்றாலும் ஏற்கனவே OFPRA வினால் கொடுக்கப்பட்ட இரண்டாம் நிலை பாதுகாப்பைத் திரும்ப பெற முடியாது.

CNDA வில் செய்யும் முறையீடு அதற்கான காலக் கெடு முடிவடைவதற்குள் செய்யப்பட வேண்டும் (உ.ம். நீங்கள் உங்கள் நிராகரிப்பு சம்மந்தப்பட்ட தபாலை ஜனவரி 20 ஆம் தேதி பெற்றுக் கொண்டிருந்தால் உங்கள் மேல் முறையீடு ஃபிப்ரவரி 21ஆம் தேதி நள்ளிரவுக்குள் CNDA வுக்குப் போய்ச் சேர வேண்டும்). மேல் முறையீடு CNDA அலுவலகத்திற்கு பெற்றுக் கொண்டதற்கான ரசீதுடன் கூடிய பதிவுத் தபாலில், சாதாரணத் தபாலில் அல்லது ஃபேக்ஸ் அனுப்பப்பட வேண்டும். இந்த முறையீடு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் நீதி மன்றத்திறகுப் போய்ச் சேரவில்லையென்றால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதாவது, கேட்கப்படாமல், பரிசீலிக்கப்படாமல் நிராகரிக்கப்படலாம்.

### ■ வழக்கறிஞரின் உதவி

CNDA வில் உங்கள் முறையீட்டின் போது உங்களுக்கு உதவு ஒரு வழக்கறிஞரின் உதவி பெற முடியும். அதற்கு நீங்கள் சட்ட ரீதியான உதவி கோரி விண்ணப்பிக்கலாம்.. வழக்கறிஞருக்கான செலவு அரசால் ஏற்கப்படும். ஆகவே அவர் உங்களிடம் பணம் கேட்க முடியாது.

சட்ட உதவி கோர நீங்கள் CNDA வின் சட்ட உதவி மையத்தை OFPRA வின் நிராகரிக்கும் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்குள் அணுக வேண்டும்:

<u>CNDAவின் சட்ட உதவி மையத்தின் விலாஸம்</u>

Cour nationale du droit d’asile

35, rue Cuvier

93558 MONTREUIL-SOUS-BOIS

சட்ட உதவி வழங்க ஒப்புக் கொண்ட வழக்கறிஞரின் பெயரைக் குறிப்பிடலாம் அல்லது நீங்கள் CNDA வுடம் ஒருவரை நியமிக்கக் கோரலாம். நீங்கள் சட்ட உதவி பெறும் பட்சத்தில் ஒரு பொழுதும், அவர் கேட்டால் கூட, நியமிக்கப்பட்ட வழக்கறிஞருக்குப் பணம் கொடுக்கக் கூடாது.

சட்ட உதவி கோரும் உங்கள் விண்ணப்பம் அந்த முறையீடு ஏற்றுக்கொள்ளத் தகுதியற்றது என்று மேலெழுந்தவாரியாகவே தெரிந்தால் மட்டுமே நிராகரிக்கப்படலாம்.

குறிப்பிட்ட 15 நாள் கெடுவுக்குள் சட்ட உதவி கோரி நீங்கள் கேட்டிருந்தால் மட்டுமே அந்த விண்ணபத்தைப் பரிசீலிக்கும் காலத்தில் CNDAவின் முன் உங்கள் முறையீட்டைச் சமர்ப்பிக்கும் கால அவகாசம் நிறுத்தி வைக்கப்படும். உங்கள் கோரிக்கையின் மீதான சட்ட உதவி மையத்தின் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து மீண்டும்

முறையீட்டிற்கான கால அவகாசம் கணக்கில் எடுக்கப்படும். ஆகவே ஒரு புது காலக் கெடு ஆரம்பிக்கிறது. அதன் அளவு ஒரு மாத அவகாசத்தில் நீங்கள் சட்ட உதவி கோரி விண்ணப்பம் செய்த வரைகடந்த நாட்கள் போக மீதமுள்ள நாட்களாகும்.

உதாரணமாக, OFPRA விண்ணப்பத்தை நிராகரிப்பதாக ஜனவரி 15 ஆம் தேதி அறிவிக்கிறது என்று வைத்துக் கொண்டால், சட்ட உதவி கோரி நீங்கள் விண்ணப்பிக்க 15 நாள் அவகாசம் உண்டு. நீங்கள் சட்ட உதவி கோரி ஜனவரி 20ஆம் தேதி விண்ணப்பித்திருந்தால், அதாவது, OFPRAவின் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 5 நாட்களில் விண்ணப்பித்திருந்தால் உங்களுக்கு சட்ட உதவி மையத்தின் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து மேல் முறையீடு செய்ய 26 நாட்கள் அவகாசம் உண்டு.

## முறையீடு

கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :

- முதலில், நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட OFPRAவின் முடிவின் பின் காணப்படும் அனைத்து விளக்கங்களையும் நன்கு படிக்கவும் ;
- மேல் முறையீடு ஃப்ரெஞ்சு மொழியில் வெற்றுத் தாளில் எழுதப்பட வேண்டும் (இதற்காகத் தனிப் படிவம் கிடையாது) அதில் உங்கள் முழுப் பெயர், பிறந்த தேதி, நாடு மற்றும் விலாஸத்தைக் குறிப்பிட வேண்டும்.
- உங்கள் முறையீட்டில் நீங்கள் கையெழுத்திட வேண்டும், மைனராக இருந்தால் உங்கள் பிரதிநிதி கையெழுத்திட வேண்டும்; ;
- முறையீட்டுடன் கட்டாயமாக OFPRA வின் முடிவின் நகலை இணைக்க வேண்டும்;
- உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் இருந்தால் உங்கள் விண்ணப்பம் பதியப்பட்ட பொழுது கொடுக்கப்பட்ட தகவல் அறிக்கையின் நகலை இணைக்க வேண்டும். ( தலைப்பு < உங்கள் விண்ணப்பத்தின் தேர்வு>பகுதி 2.2.1 இல் பார்க்கவும்) ;
- நீங்கள் உங்கள் முறையீட்டிற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும், அதாவது OFPRA உங்கள் விண்ணப்பத்தை நிராகரித்ததன் அல்லது உங்களை அகதி என்று அறிவிக்காமல் இரண்டாம் நிலை பாதுகாப்பிற்கு உத்தரவிட்டதின் காரணங்களுடன் நீங்கள் ஏன் ஒத்துப் போகவில்லை என்று விளக்க வேண்டும்;
- உங்கள் அடையாளம் மற்றும் நாடு பற்றிக் கூறும ஆவணங்களை இணைக்க வேண்டும் ;
- உங்கள் கூற்றைப் பூர்த்தி செய்யும் ஆவணங்களையும் இணைக்க வேண்டும் ;
- OFPRA வில் உங்களுடன் உரையாடிய மொழியை எதிர்க்க விரும்பினால், நீங்கள் எந்த மொழியில் உரையாட விரும்புகிறீர்கள் என்று குறிப்பிட வேண்டும். நீதி மன்றம் உங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டபின் அந்த மொழியில் ஒரு மொழி பெயர்ப்பாளரை நியமிக்க முடியவில்லையென்றால் அது உங்களால் புரிந்து கொள்ள முடியும் என்று எண்ணும் மொழியில் உங்களைக் கேள்விகள் கேட்கும்.
- உங்கள் மேல் முறையீட்டை அனுப்பிய மற்றும் பெற்றுக கொண்டதற்கான சான்றுகளையும் அவற்றின் நகலையும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும. ;
- அனைத்து விலாஸ மாற்றங்களையும் CNDAவிற்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும்;
- மேல் முறையீடு பதிவு செய்யப்பட்டபின் உங்கள் கோப்பின் விவரங்களைக் கேட்கலாம்.

உங்கள் நாட்டைப் பற்றி விளக்கும் ஆவணங்களை இணைக்கையில், கோப்பில் அவற்றின் நகலை இணைத்துவிட்டு பாஸ்போர்ட் அல்லது தேசிய அடையாள அட்டையின் அசலைப் பத்திரமாக வைத்திருப்பது நல்லது. இந்த ஆவணங்களை வைத்திருப்பது CNDA உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பும் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள உதவும். தீர்ப்பு வழங்கப்படும் பொழுது தேவைப்பட்டால் நீங்கள் அவற்றின் அசலைக் காண்பிக்கலாம்.

உங்கள் கூற்றை நிரூபிக்க உதவும் ஆவணங்களைப் பொறுத்த வரையில் அசல் ஆவணங்களைக் கோப்பில் இணைத்து, நகல்களை உங்களுடன் வைத்திருப்பது நல்லது. இந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாவா எடுத்துக் கொள்ளப்படும் தினம், நீங்கள் கேட்டால், திருப்பி அளிக்கப்படலாம் அல்லது கடைசியாக தபாலில் அனுப்பப்படலாம். உங்கள் கூற்றை நிரூபிக்கும் ஆவணங்கள் ஃப்ரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்திருக்கப்பட வேண்டும். மொழி பெயர்ப்பு இல்லாவிட்டால் CNDA வினால் அவற்றை உபயோகிக்க முடியாது. அரசு சான்றிதழ்கள், நீதி மன்ற அல்லது

காவல்துறை ஆவணங்கள் தவிர மற்றவை அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளரால்தான் மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவசியமில்லை.

உங்களை ஒரு பொது விசாரணைக்கு அழைத்திருந்தால், நீங்கள் உங்களுக்கு அழைப்பில் குறிப்பிடப்பட்ட தேதி வரையிலான தகவல்களை எழுதி எடுத்துச் செல்லலாம்.

## ■ முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதின் சான்று

உங்கள் மேல் முறையீடு பதிவு செய்யப்பட்டபின் CNDA உங்களுக்கு, நீங்கள் கொடுத்துள்ள விலாஸத்திறகு <மேல் முறையீடு பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி> என்ற ஆவணத்தை அனுப்பும். இந்த ஆவணம் உங்கள் மேல் முறையீடு பதிவு செய்யப்பட்டுவிட்டதென்று கூறும்.

சில விதி விலக்குகள் தவிர, (தலைப்பு <முறையீட்டின் தடை விதிக்கும் தன்மை>கீழே பார்க்கவும். இந்த ஆவணம் நீங்கள் தஞ்சம் கோரி செய்த விண்ணப்பத்தைப் புதுப்பிக்கக் கோர உதவும், ஏனெனில், CNDA உங்கள் விண்ணப்பத்தின் மீதான தீர்ப்பை அறிவிக்கும் வரை நீங்கள் ஃப்ரானஸ் நாட்டில் தங்கியாருக்க அனுமதி உண்டு.

## ■ முறையீட்டின் தடை விதிக்கும் தன்மை

**பொதுவாக,CNDAவின்முன்நீங்கள்உங்கள்விண்ணப்பத்தைநிராகரிக்கும்OFPRAவின்முடிவுக்குஎதிராகமேல்முறையீடுசெய்யும்உரிமைஉண்டு .முறையீடுசெய்தவுடன்OFPRAவின்முடிவுக்குத்தடைவிதிக்கப்படும்.** அதாவது ஃப்ரான்ஸ் நாட்டில் இருக்கும் உரிமை, மேல் முறையீடு செய்வதற்கான காலக் கெடு முடியும் வரையில் அல்லது முறையீடு செய்திருந்தால் நீதி மன்றம் தன் தீர்ப்பை வழங்கும் வரை தொடரும்.

ஆனால், உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தின் மறுதளிப்புக்கு முன் நீங்கள் ஃப்ரான்ஸ் நாட்டில் இருக்கும் உரிமையை இழந்திருந்தால், ( தலைப்பு < OFPRA வின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் உதவிக்கு முடிவு>பகுதி 3.1.இல் பார்க்கவும்) விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதை அல்லது ஏற்றுக் கொள்ள மறுத்த முடிவை எதிர்த்து **CNDA** வின் முன் முறையீடு செய்யும் உரிமை உங்களுக்கு உண்டு ஆனால் அந்த முறையீடு தானாகவே தடை விதிக்கும் தன்மை கொண்டதல்ல :

✓ **கீழ்க்கண்ட ஏதாவது ஒரு முடிவு உங்களைப் பற்றி எடுக்கப்பட்டிருந்தால் இந்தமுறையீடுதடைவிதிக்காது** மற்றும் உங்களை விலக்கி வைக்கும்::

1. நீங்கள் ஏற்கனவே வேறொரு நாட்டில் தகுந்த பாதுகாப்பு பெறுகிறீர்கள் என்றும் அந்த நாடு ஐக்கிய ஐரோபாபவில் உறுப்பினர் இல்லை என்றும் நீங்கள் அந்த நாட்டிற்குத் திரும்பச் செல்ல முடியும் என்பதால் OFPRA வினால் உங்கள் மனு ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என்று முடிவு செய்யப்பட்டிருந்தால் (பகுதி 3.3 பார்க்கவும்).
2. OFPRAவினஉங்கள் மனுவை மூடுவது என்ற முடிவு (பகுதி 3.3 பார்க்கவும்.);
3. உங்களை வெளியேற்ற வேண்டுமென்ற நடவடிக்கையைந் நோல்வியடையச் செய்வதற்காகவே செய்யப்பட்ட முதல் மறு பரிசீலனை மனு ஏற்க OFPRA வின் மறுப்பு.

✓ கீழ்க்கண்ட ஏதாவது ஒரு முடிவு உங்களைப் பற்றி எடுக்கப்பட்டிருந்தால் **மேல்முறையீடு தானாகத் தடை விதிக்காது, நீங்கள்உங்கள்மேல்முறையீடுகாலம்வரைஉங்களைவெளியேற்றுவதற்குத்தடைவிதிக்கநிர்வாகவாரியத் திடம்கோரலாம்**: :

1. துரிதப் படுத்தப்பட்ட நடைமுறையில் வைக்கப்பட்ட விண்ணப்பத்தை OFPRA நீங்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்து வருகிறீர்கள் என்ற காரணத்தினால் நிராகரித்துள்ளது; ;
2. நீங்கள் இந்த நாட்டில் இருப்பது பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியது என்று கருதி OFPRA உங்கள் தஞ்சம் கோரும் மனுவை நிராகத்திருந்தால்
3. ஏற்றுக் கொள்ளக்கூடியது என்று கருதப்பட்ட மறு பரிசீலனை மனுவை நிராகரிப்பது என்ற OFPRAவின் முடிவு ;
4. உங்களை வெளியேற்றுவதைத் தோற்கடிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்ட மறு பரிசீலனை மனுவை நிராகரிக்க OFPRA வின் முடிவு;

5. உங்களை வெளியேற்ற முடிவு அல்லது ஒரு நிர்வாக அல்லது சட்டரீதியான பிரதேசத்தில் தடை மற்றும் நீங்கள் வீட்டுக் காவல் அல்லது சிறைக் காவலில் உள்ளீர்கள் என்ற காரணத்தினால் மனு ஏற்றுக் கொள்ளப்பட ஏதுவானதில்லை அல்லது நிராகரிக்க முடிவு (தலைப்பு < உங்களை வெளியேற்ற முடிவு, அல்லது ஒரு இடத்தில் நுழைய நிர்ஆங்கத்தினால் விதிக்கப்பட்ட தடை> பகுதி 2.2.1 இல் பார்க்கவும்).

நீங்கள் உங்களை வெளியேற்றும் நடவடிக்கையின் எதிராக முறையீடு செய்யலாம் அல்லது, உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் பதியுமுன் உங்களை வெளியேற்றும் நடவடிக்கை உங்களுக்கு அறிவிக்கப்பட்டு விட்டது மற்றும் அதற்கு எதிரான மேல் முறையீடு இனியும் எடுக்க முடியாத நிலையில் உங்களை வீட்டுக் காவலில் வைத்தாலோ அல்லது சிறையில் அடைத்தாலோ அவ்வாறு செயத்தற்கு 48 மணி நேரங்குக்குள்ளாக இந்தத் தடை கோரலாம்.

## ■ CNDAவில் நேரடி விசாரணை.

CNDA உங்கள் மேல் முறையீட்டைப் பரிசீலிக்க உங்களை அழைக்கும். இந்த அழைப்பு உங்களுக்குத் தபால் மூலம் நேரடி விசாரணை தேதிக்கு ஒரு மாதம் முன்னால் அனுப்பப்படும். உங்கள் விண்ணப்பம் துரிதப்படுத்துப்பட்ட முறையில் இருந்தால் இந்த அழைப்பு விசாரணைக்கு 15 நாட்கள் முன்னர் அனுப்பப்படும்.

எனினும், உங்கள் முறையீட்டில் OFPRA வின் முடிவைப் பரிசீலிக்கப் போதுமான தகுந்த ஆதாரங்கள் இல்லையென்றால் CNDA, உங்கள் முறையீட்டு மனுவைப் படித்துவிட்டு உங்களை விசாரணைக்கு அழைக்காமலேயே நிராகரித்து ஆணையிடலாம்.

சாதாரணமாக இந்த விசாரணை:

- Montreuil இல் உள்ள CNDAவின் இடத்திலோ, அல்லது Palais de justice (Ile de la Cité) இலோ ;
- காணொலி நேர் காணல் மூலம் நீதித் துறை அமைச்சக அலுவலகத்திலோ தடை பெறும். காணொலி மூலம் நடைபெறும் விசாரணையில் தரம் மற்றும் இரகசியத் தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

✓ ***தீர்ப்பைமுடிவுசெய்தல்*** :

CNDAவில் விசாரணை மற்றும் தீர்ப்புக்கு ஒரு மாஜிஸ்டிரேட் தலைமை தாங்குவார்.அது முக்கியமாக ஐக்கிய நாடுகளின் உயர் இயக்குநரால் (le Haut-Commissaire des Nations-Unies pour les Réfugiés (HCR)நியமிக்கப்பட்டவராவார். மன்றத்தின் தீர்ப்பு உங்கள் முறையீட்டை ஒரு அதிகாரியின மூலம் படிக்க வைத்து பாரபட்சமின்றி விளக்க வைத்து மற்றும் உங்கள் விளக்கங்கள் மற்றும் உங்கள் வழக்கறிஞரின் விளக்கங்கள் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு வழங்கப்படும்.

அலுவலகம் உங்கள் மனுவைத் துரிதப்பட்த்தப்பட்ட முறையில் எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்தாலோ அல்லது உங்கள் மனு ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று நீர்மானித்தாலோ CNDAவின் ஒற்றை நீதிபதி உங்கள் முறையீட்டடின் மீது ஐந்து வாரங்களுக்குள் நீர்ப்பு வழங்குவார்.

நீதி மன்றம், உங்கள் மனு துரிதப்படுத்தப்பட்ட முறைக்கு ஏற்றதல்ல என்றோ அல்லது ஏற்கப்படத் தகுந்ததல்ல என்றோ கூற ஒப்பவில்லையென்றால் தானாகவோ அல்லது உங்கள் வேண்டுகோளின்படியோ ஒரு குழுவை அமைக்கலாம்.

✓ ***மொழிபெயர்ப்புச்சேவை*** :

CNDA நீங்கள் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் பதியும சமயத்தில் குறிப்பிட்டுள்ள மொழியிலோ அல்லது முடியாத பட்சத்தில் உங்களுக்குப் போதுமான பரிச்சயம் உள்ள மொழியிலோ ஒரு மொழி பெயர்ப்பாளரை நியமிக்கும் (தலைப்பு <ஓஎஃப்பீஆர்ஏ (OFPRA) அலுவலக சந்திப்பிற்கு மொழித் தேர்வு> பார்க்கவும்). OFPRAவில் விசாரணையில் மொழிப்பிரச்சினை இருந்ததென்று நீங்கள் கருதினால் அதை CNDA வின் முன் வைக்கப்படும் மேல் முறையீட்டில் நீங்கள் குறிப்பிட வேண்டும். காணொலி நேரடி சந்திப்பில் விசாரணை நடந்தால் விசாரணை நடக்கும் அறையில் உங்களுடன் ஒரு மொழி பெயர்ப்பாளர் இருப்பார். உங்களுடன் இருப்பதற்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் கிடைக்கவில்லையென்றால் நீதி மன்றம் ஒரு மொழி பெயர்ப்பாளர் மன்ற அறையில் இருக்கிறார் என்று தெரிந்த பின்னே விசாரணையை வைத்துக் கொள்ளமுடியும்.

✓ ***விசாரணையில்உங்கள்பங்கேற்பு*** :

விசாரணை சமயத்தில் நீங்கள் இருக்க வேண்டும். வரமுடியவில்லை என்றாலோ அல்லது தாமதம் ஏற்படும் என்றாலோ CNDAவிடம் தெரிவிப்பது நல்லது. விசாரணைக்கு உங்களால் வர முடியாதென்றால் எழுத்து மூலம் நீங்கள் வர முடியாதத்திற்கு விளக்கமளித்து விசாரணையைத் தள்ளிப்போடக் கோரலாம். தள்ளிப் போடுதல் ஒரு உரிமை யல்ல. CNDA வின் தீர்ப்புக் குழுவின தலைவர் மட்டுமே உங்கள் விசாரணையை வேறொரு நாளைக்குத் தள்ளிப் போடுவது பற்றி முடிவெடுக்கக்கூடியவர்.

✓ ***திறந்தமன்றத்தில்விசாரணை*** **:**

விசாரணை திறந்த மன்றத்தில் நடைபெறும். நீங்கள் மன்றத் தலைவரிடம் மூடிய அறையில் விசாரணை செய்யக் கோரலாம். அதாவது உங்கள் மனு பொது மக்கள் இல்லாமல் நடக்கும். அப்படியென்றால் மூடிய அறை விசாரணை உடனடியாக அங்கீகரிக்கப்படும். மன்றத் தலைவரும் தானாகவே அவ்வாறு முடிவெடுக்கலாம்.

## ■ CNDAவின் முடிவு.

முடிவெடுத்தவுடன், CNDA தன் முடிவை ‘பெற்றுக் கொண்டதற்கான ரசீதுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பும்.

முடிவு ஃப்ரெஞ்சு மொழியில் இருக்கும். அதனுடன் கூட உங்களுக்குப் புரியக்கூடும் என்று நிஜனக்கக்கூடிய மொழியில் தீர்ப்பின் சாராம்சம் இணைக்கப்பட்டிருக்கும். .

தன் முடிவில் CNDA :

- OFPRAவின் நிராகரிப்பது என்ற முடிவை ரத்து செய்து உங்களுக்கு அகதிஎன்ற அந்தஸ்து வழங்க முடியும் அல்லது இரண்டாம் நிலை பாதுகாப்புக்கு உத்தரவிட முடியும். அவ்வாறு உத்தரவிட்டால் OFPRA வினால் கொடுக்கப்படும் இரண்டு பாதுகாப்புகளுள் ஒன்று உங்களுக்குக் கிடைக்கும்.
- OFPRA வின் இரண்டாம் நிலை பாதுகாப்பு வழங்கும் முடிவை ரத்து செய்து உங்களை அகதியாக அங்கீகரிக்க முடியும் ;
- OFPRA வின் முடிவை அங்கீகரித்து உங்கள் முறையீட்டை நிராகரிக்கலாம்.
- குறிப்பிட்ட சமயங்களில் OFPRA வின் முடிவை ரத்து செய்து உங்கள் மனுவை மறு பரிசீலனை செய்யுமாறு OFPRA வுக்கு உத்தரவிடலாம்.

CNDA வின் முடிவு தேசிய நீதிமன்றத்தின் மேல் முறையீட்டுக்குக் கட்டுப்பட்டது. இங்கு உங்கள் மனு முழுவதும் பரிசீலிக்கப்படமாட்டாது. சில சட்ட ரீதியான கேள்விகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படும். இந்த நடவடிக்கை நீளமானது மற்றும் அதற்குச் சிறப்பு வழக்கறிஞரின் உதவி அவசியம் தேவை. சட்ட உதவி கோரலாம். இந்த மேல் முறையீட்டால் நீங்கள் ஃப்ரான்ஸ் நாட்டில் தங்கியிருப்பது நீட்டிக்கப்படமாட்டாது மற்றும் உங்கள் நாட்டிற்கு நீங்கள் திரும்ப அனுப்பப்படுவதற்குத் தடையாகாது.இந்த முறையீடு பற்றி நீங்கள் ஒரு சங்கத்திடமோ அல்லது வழக்கறிஞரிடமோ ஆலோசனை பெற்று முடிவெடுப்பது நல்லது.

## ■ CNDAவின் முடிவைத் தொடர்ந்து உதவிக்கு முடிவு

உதவி பெற உங்கள் உரிமையின் முடிவு:

- CNDA வின் முடிவு திறந்த மன்றத்தில் வாசிக்கப்பட்டால் அப்பொழுது. அந்த முடிவு உங்களுக்கும் தெரிவிக்கப்படும் ;

- CNDA வின் முடிவு வெளியிடப்பட்ட சமயம் அது முடிவுக்கு வரும்.

தங்குவதற்கான உரிமை முடிவடைந்தால் நீங்கள் ஃப்ரான்ஸ் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் மற்றும் ஃப்ரான்ஸ் நாட்டு பரப்பை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்குள்ளாவீர். (பகுதி 5 பார்க்கவும்).

## 3.3. மூடப்பட்ட விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்தல்

உங்கள் விண்ணப்பத்தின் மேலான பரிசீலனை மூடப்பட்டிருந்தால் (தலைப்பு < OFPRAவின் முடிவு> பகுதி 3.1 இல் பார்க்கவும்) ஒரு முறை மட்டும் நீங்கள் அந்த முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 9 மாதங்களுக்குள் மனுவை மூட முடிவெடுத்ததை எதிர்த்து திரும்பத் திறக்க விண்ணப்பிக்கலாம். அதற்கு நீங்கள் தஞ்சம் கோருவோருக்கான முதல் நிலை வரவேற்பு மையத்தை அணுக வேண்டும் (SPADA) பிறகு தனிப்பட்ட சாளரத்தை அணுகி புதிதாகப் பதிவு செய்ய வேண்டும் (பகுதி 2 பார்க்கவும்).

அதன் பிறகு காவல் துறையிடம் பதிவுக்குப் பிறகு 8 நாட்களுக்குள் உங்கள் மனுவைத் திரும்பத் திறக்குமாறு OFPRAவிடம் கோர வேண்டும். உங்கள் கோப்பு எந்த நிலையில் தடைபட்டதோ அங்கு மீண்டும் திறக்கப்படும்.

9 மாதங்களுக்குள் உங்கள் மனுவைத் திரும்பத் திறக்கக் கோரினால் உங்களுக்கு மீண்டும் ஃப்ரான்ஸ் நாட்டில் தங்க உரிமை கிடைக்கும் மற்றும் தஞ்சம் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்தற்கான அத்தாட்சி உங்களுக்குத் தரப்படும்.

9 மாதங்களுக்கு மேல் மனு செய்தால் மறுபடி திறக்கக் கோரும் உங்கள் மனு ஒரு மறு பரிசீலனை மனுவாகக் கருதப்படும். (<மறு பரிசீலனை> பகுதி 3.4 பார்க்கவும்).

## 3.4. மறு பரிசீலனை

உங்கள் தஞ்சம் கோரும் மனு CNDAவினால் நிராகரிக்கப்பட்டால் அல்லது நீங்கள் OFPRAவின் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள்மேல் முறையீடு செய்யவில்லையென்றால் நீங்கள் OFPRAவை உங்கள் விண்ணப்பத்தை மீண்டும் புதிதாகப் பரிசோதிக்கக் கோரலாம். ஆனால் அவ்வாறு செய்வதற்கு ஆதரவாக உங்களிடம் ஏதாவது << புது விஷயம் >> இருக்க வேண்டும். அதாவது:

- CNDA வின் முடிவுக்குப் பிற்பட்ட தேதியில் இருக்க வேண்டும் அல்லது அதற்கு முந்தையதாக இருந்தாலும் உங்களுக்கு அந்தத் தேதிக்குப பின்தான் தெரியவந்தது ;
- மேலும் அந்த விஷயம் நீங்கள் உங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்றால் உங்களுக்கு மிகப் பெரிய அபாயம் காத்திருக்கிறது என்பதை நியாயப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

நீங்கள் ஒரு சங்கத்திடமோ அல்லது ஒரு வழக்கறிஞரிடமோ ஆலோசனை பெறலாம். .

மறு பரிசீலனை மனுச் செய்ய நீங்கள் தஞ்சம் கோருவோருக்கான முதல் நிலை மையத்தை அணுக வேண்டும், பிறகு தனிப்பட்ட சாளரத்தை அணுகி புதியதாக உங்கள் பெயரைப் பதிய வேண்டும். (பகுதி 2 பார்க்கவும்).

அதன் பிறகு இந்தப் புதிய பதிவிற்குப் பின் 8 நாட்களுக்குள் OFPRA விடம் மறு பரிசீலனைக்கான உங்கள் மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும். உங்கள் மனு முழுமையானதாக இல்லாவிடில் அலுவலகம் உங்களை மேலும் 4 நாட்களுக்குள் பூர்த்தி செய்ய அவகாசம் கொடுக்கும்..

அதன் பிறகு OFPRA உங்கள் மனுவை முதல் கட்ட ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு அதை ஏற்றுக் கொள்வதைப் பற்றி 8 நாட்களுக்குள் முடிவெடுக்கும். இந்த ஆய்வின் பொழுது உங்களைச் சந்திக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

அதற்குப் பிறகு, நீங்கள் முன் வைத்த புள்ளிகள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியத்தை வலுப்படுத்தாவிடில் OFPRA உங்கள் மறு பரிசீலனை மனுவை எடுத்துக் கொள்ள முடியாது என்று அறிவிக்கலாம்.

ஒரு வேளை OFPRA உங்கள் மனுவை ஏற்றுக் கொள்ளக்கூடியதாகக் கருதினால் அது முழுமையாகப் பரிசீலிக்கப்படும் மற்றும் வேறு விதமான முடிவு இல்லாவிட்டால் துரிதப்படுத்தப்பட்ட முறையில் எடுத்துக கொள்ளப்படும்.

OFPRA வின் முடிவின் படி உங்கள் மறு பரிசீலனை மனு ஏற்றுக் கொள்ளமுடியாததாக இருந்தால் அல்லது நிராகரிக்கப்பட்டால் CNDA வின் முன் மேல் முறையீடு செய்யலாம். (பகுதி 3.2. பார்க்கவும்).

**உங்கள் மறு பரிசீலனை மனு நிலுவையில் இருக்கும் பொழுது நாட்டில் நீங்கள் தங்கியிருக்க உரிமை உள்ளதா?**

முதல்மறுபரிசீலனைமனுஎன்றால் (தலைப்பு «OFPRAவின் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் உதவிக்கு முடிவு» பகுதி 3.1 பார்க்கவும்):

**-** காவல் துறையின் அனுமானத்தில் நீங்கள் இந்த மறுபரிசீலனை மனுவை உங்களை வெளியேற்ற முயற்சிப்பதை முறியடிப்பதற்காகவே சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்று தெரிய வந்தால் *OFPRA*அந்த மனுவே எடுத்துக் கொள்ள முடியாதது என்று அறிவித்தால் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து நீங்கள் நாட்டில் தங்கியிருக்கும் உரிமையை இழக்கிறீர்கள். அப்பொழுது உங்களை வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்படலாம்.*;*

-OFPRA உங்கள் மனு எடுத்துக் கொள்ளப்படத் தகுந்ததல்ல என்று அறிவித்திருந்தாலும் காவல் துறையின் அனுமானத்தில் நீங்கள் உங்களை வெளியேற்றும் முயற்சியைத் தோற்கடிக்கும் நோக்கத்துடன் செய்யவில்லை என்று நினைத்தால் நீங்கள் தங்கியிருக்கும் உரிமையை OFPRAவின் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து இழப்பீர்கள் மேலும் உங்களுக்கு எதிராக வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்படலாம் ஆனால் நிர்வாக மன்றத்திடம் நீங்கள் அந்த நடவடிக்கையை CNDAவிடம் மேல் முறையீடு செய்யும் வரை நிறுத்தி வைக்குமாறு கோரலாம்.

-OFPRAஉங்கள் மறு பரிசீலனை மனுவை எடுத்துக் கொள்ளக் கூடியதாக முடிவு செய்து பின் அதை நிராகரித்தால் ***OFPRA***வின் அந்த முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து தங்கியிருக்க உங்களுக்கு உரிமை கிடையாது. மேலும் உங்களுக்கு எதிராக வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்படலாம் ஆனால் நிர்வாக மன்றத்திடம் நீங்கள் அந்த நடவடிக்கையை ***CNDA***விடம் மேல் முறையீடு செய்யும் வரை நிறுத்தி வைக்குமாறு கோரலாம்.

இரண்டாம் முறை மற பரிசீலனை கோரும் மனுவாக இருந்தால் உங்களுக்குத் தங்கியிருக்க உரிமை கிடையாது. உங்களை வெளியேற்றும் முடிவு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படலாம், அதுவும் OFPRAமுடிவுக்குக் காத்திருக்காமல்.

# 4.விண்ணப்பதாரரின் வரவேற்பிற்கான நிபந்தனைகள் மற்றும் அவரது உரிமைகள்

தஞ்சம் கோரியுள்ள விண்ணப்பதாரர் என்ற முறையில் உங்களுக்குச் சில உரிமைகள் உள்ளன, அவை:

- ஒரு தஞ்சம் கோருவோரை வரவேற்கும் மையத்தில் (CADA) அல்லது ஒரு அவசர காலத் தங்குமிடத்தில் நீங்களும், தேவைப்பட்டால் உங்கள் குடும்பத்தினரும் தங்குவதற்கான உரிமை (பகுதி 4.1.பார்க்கவும்) ;
- தஞ்சம் கோருவோருக்கான மாதாந்திர உதவித் தொகை (ADA), அதன் அளவு உங்கள் குடும்பத்தின் அளவைப் பொறுத்து மாறுபடும் (பகுதி 4.2).

உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தை தனிப்பட்ட சாளரத்தில் பதியும் போது நடந்த சந்திப்பில் OFIIஇனால் சம்மதிக்கப்பட்ட உங்களை அனுமதிப்பதற்கான நிபந்தனைகளை விளக்கும் கடிதம் (பகுதி 2.2.2 பார்க்கவும்).

கூடவே, உங்கள் நிர்வாக, சமூக நலத் தேவைகளில் வேண்டிய உதவி செய்து உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைத் தொடரவும் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கல்வி, மருத்துவ வசதி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற சமூக நல உரிமைகளைப் பெறவும் உதவிகள் கிடைக்கும். (பகுதிகள் 4.3 முதல் 4.5 வரை).

## 4.1. தஞ்சம் கோருபவர் தங்குதல்

### ■ தங்குமிடங்கள்

இவை தஞ்சம் கோருவோருக்கான தங்கும் மையங்கள் (CADA) மற்றும் தஞ்சம் கோருவோர் தங்கும் அவசர காலத் தங்குமிடங்கள் (HUDA) ஆகும். இந்தத் தங்குமிடங்கள் அரசின் நிதி உதவி பெற்று நடத்தப்படுகின்றன. அவை சங்கங்களின் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன.

தஞ்சம் கோருவோருக்காக ஃப்ரான்ஸ் நாட்டில் 100000க்கும் மேற்பட்ட தங்குமிடங்கள் செயல்படுகின்றன. இவை அடுக்கு வீடுகள், மையங்கள் மற்றும் ஹோட்டல் அறைகள் ஆக இருக்கின்றன. CADA மற்றும் HUDA வில் நீங்கள் சில அறைகளை (சமையலறை, குளியலறை மற்றும் கழிப்பறை போன்றவை) மற்ற தங்குபவர்கள் மற்றும் குடும்பங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கலாம்.
தங்குவதற்கான இட வசதி பெற உங்களிடம் நிலுவையில் இருக்கும் தஞ்சம் கோரும் விண்ணப்பம் சமர்ப்பித்த அத்தாட்சி இருக்க வேண்டும்.

CADA மற்றும் HUDA மையங்களில், உங்களுக்கு நிர்வாக மற்றும் சட்ட ரீதியான உதவிகள் (தஞ்சம் கோரும் வழிமுறை, மருத்துவத் தேவைகளில் மற்றும் சமூக நல உதவிகள் (சமூக நல உரிமைகள், மருத்துவ வசதி, குழந்தைகள் கல்வி, போன்றவை) கிடைக்கும். நீங்கள் ஹோட்டல் அறையில் தங்க வைக்கப்பட்டிருந்தால் உங்களுக்கு இந்த உதவிகள் தஞ்சம் கோருவோருக்கான முதல் நிலை வரவேற்பு மையத்தில் (SPADA) கிடைக்கும். -

### ■ தங்குமிடம் நோக்கிச் செல்லுதல்.

நீங்கள் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைத் தனிப்பட்ட சாளரத்தின் மூலம் பதியும் பொழுது அங்கிருக்கும் OFII உங்களுக்கு தங்குமிடம் மற்றும் தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகை ஆகிய பல வசதிகளை அனுமதி சமயத்தில் அளிக்கிறது.:

- **இந்தஉதவிஅளிக்கும்சலுகைகளைநீங்கள்ஏற்றுக்கொள்ளாவிட்டால்**அனுமதி சமயத்தில் வழங்கும் சலுகைகள் (CMA) உங்களுக்கு வழங்கப்படமாட்டா.

- ***நீங்கள்இந்தச்சலுகைகளைஏற்றுக்கொண்டால்*** நீங்கள் இருக்கும் தஞ்சம் அளிக்கும் நடைமுறையைப் பொறுத்து அந்த மாவட்டம், பிராந்தியம் மற்றும் ஃப்ரான்ஸ் நாடு முழுவதும் இடம் இருப்பதைப் பொறுத்து CADA (காடா)விலோ அல்லது அவசர காலத் தங்குமிடத்திலோ (HUDA)OFIIஒரு இடத்தைப் பெற்றுத்தரும்.

நீங்கள் உங்கள் விண்ணப்பத்தைப் பதிவு செய்த மாவட்டம் அல்லது பிராந்தியத்திற்கு வெளியே கூட ஒரு தங்குமிடம் தரப்படலாம். நீங்கள் அந்த இடத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தால் உங்களுக்கு உதவித் தொகை (ADA) கிடைக்காது.மற்றும் தங்குவதற்கான வேறெந்த இடமும் முன் வைக்கப்படமாட்டாது.

இடம் கிடைக்கவில்லையென்றால் OFII உங்களை SPADA விடம் அனுப்புவார்கள். அங்கு ஒரு தங்குமிடம் தேடப்படும்.

### தங்குமிட்த்தில் அனுமதி மற்றும் அங்கிருந்து வெளியேற்றம்

**நீங்கள்CADAஅல்லது HUDA வில்அனுமதிக்கப்பட்டிருந்தால்** நீங்கள் உங்கள் விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கை முழுமையாக (OFPRA et CNDA)வில் நடைபெறும் வரை அங்கு தங்கியிருக்கலாம்.

எனினும், சில சமயங்களில், நீங்கள் OFPRAவினால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் வரை மட்டுமே தங்கியிருக்க முடியும் (தலைப்பு <<உங்களை அனுமதிப்பதற்கான சலுகைகள் எப்பொழுது முடிவுக்கு வரும்?>> பகுதி 4.2.இல் பார்க்கவும்).

**நீங்கள்அகதியாகஅங்கீகரிக்கப்பட்டாலோஅல்லதுஇரண்டாம்நிலைபாதுகாப்புவழங்கப்பட்டாலோ**(OFPRAஅல்லது CNDAவின் உறுதியான முடிவான தீர்ப்பு) நீங்கள் CADAஅல்லது HUDA வை விட்டு மூன்று மாதங்களுக்குள் வெளியேற வேண்டும். இந்தக் கெடு ஒரு முறை புதுப்பிக்கப்படலாம். இந்த காலத்திற்கு மேல் நீங்கள் அங்கு தங்கியிருந்தால் நீதிபதியின் ஆணையோடு உங்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படலாம்.

உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் (OFPRAஅல்லது CNDAவின் எதிர் மறையான முடிவான தீர்ப்பு) நீங்கள் CADAஅல்லது HUDA வை விட்டு இந்த நாட்டில் நீங்கள் தங்கியிருக்ககூடிய காலம் முடிவடையும் பொழுது வெளியேற வேண்டும். இதற்கு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலக்குகள் உள்ளன (தலைப்பு «உதிவிக்கு முடிவு» பகுதி 3.1. மற்றும் 3.2 இல் பார்க்கவும்).

**நீங்கள்இந்தக்காலத்திற்குமேலும்தங்கியிருந்தால்** உங்கள் மேல் வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அந்த நிலையில் மாவட்டக் காவல் அதிகாரியோ அல்லது CADAஅல்லது HUDAவின் நிர்வாகஸ்தரோஉங்கள் இடத்தைக் காலி செய்யக் கோரி கட்டளையிடலாம். நீங்கள் அப்படிச் செய்யவில்லையென்றால் மாவட்டக் காவல் அதிகாரி அல்லது நிர்வாகஸ்தர் நிரவாக்த துறை நீதிபதியை அணுகி உங்களை இடத்தைக் காலி செய்யச் சொல்லி ஆணை பிறப்பிக்க வைக்கலாம். தேவைப்பட்டால் தேசிய போலிஸ் அல்லது மாவட்டக் காவல் துறையினர் உங்களை வெளியேற்றுவார்கள். .

## 4.2. தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகை (ADA)

தஞ்சம் கோருவோருக்கான உதவித்தொகை (ADA) நிர்வாகம் OFIIயினால் செய்யப்படுகிறது மற்றும் அந்தத் தொகை சேவை மற்றும் பட்டுவாடா இலாக்கா அதிகாரிகளால் செய்யப்படுகிறது.

இந்தத் தொகை OFII மூலம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு கார்டு மூலம் கொடுக்கப்படுகிறது. இது இந்த நாட்டில் நீங்கள் தஞ்சம் கோரியுள்ளவர் என்ற நிலைமையில் நீங்கள் இருக்கும் வரையிலோ அல்லது வேறொரு நாடு உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றால் அந்த நாட்டிற்கு நீங்கள் மாற்றப்படும் வரை உங்களுக்குக் கொடுக்கப்படும்.

## இதைப் பெறுவதற்கான நிபந்தனைகள்

தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகையைப் பெறுவதற்கு நீங்கள்:

1- தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளதற்கான அத்தாட்சியை வைத்திருக்க வேண்டும்.;

2-18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும் ;

3- நீங்கள் தஞ்ம் கோரியவராக இருந்தால் தனிப்பட்ட சாளரத்தில் OFII முன் வைத்த உதவிக்கான நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

**தஞ்சம்கோரும்விண்ணப்பம்பெற்றுக்கொண்டதற்கானஅத்தாட்சிஇல்லாமல்நான்வரவேற்பிக்கானசலுகைகளைப்பெறமுடியுஆம ?**

மேலே குறிப்பிட்டபடி, வரவேற்பிற்கான சலுகைகளைப் பெற நிலுவையில் உள்ள தஞ்சம் கோரி செய்த விண்ணபத்தைப் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி தேவை...

எனினும், உங்களிடம் நீங்கள் தஞ்சம் கோரி செய்த விண்ணபத்தைப் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி இருந்தாலும் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணபத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மனு கொடுத்திருந்தால் அல்லது நீங்கள் மிகுந்த காலம் கடந்து தஞ்சம் கோரியிருந்தால், தகுந்த காரணமில்லாமல் விண்ணப்பித்திருந்தால் இந்தச் சலுகைகள் உங்களுக்கு மறுக்கப்படலாம். (தலைப்பு <<உங்கள் விண்ணபத்தின் தேர்வு>> பகுதி 2.2.1 இல் பார்க்கவும்).

மேலும்,, சில காரணங்களுக்காக (பாதுகாப்பான நாட்டிலிருந்து வருபவர், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியவர்) துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பம் *OFPRA*வின் நிராகரிப்புக்குப் பின் தஞ்சம் கோரி செய்த விண்ணபத்தைப் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி எவரிடமிருந்து திருப்பிப்பெறப்பட்டதோ அல்லது புதுப்பிக்கப்படவில்லையோ அவர்கள் *OFPRA*வின் முடிவிறகுப் பிறகும் மற்றும் *CNDA*வில் முறையீடு செய்திருந்தால் நீதிபதி தீர்ப்பை வழங்கும் வரை (நிர்வாக நீதிபதி அல்லது தஞ்சம் வழங்கும் நீதிபதி). அத்தகைய நிலைகளில் நிதி உதவி தேவைக்கேற்ப மாற்றப்பட்டோ அல்லது பொஉரளாகவோ வழங்கப்படும்.

## கோரிக்கை விண்ணபத்தைப் பூர்த்தி செய்தல்

நீங்கள் தஞ்சம் கோருபவராக இருந்தால் தனிப்பட்ட சாளரத்தில் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டபின் நீங்கள் OFII யினால் முன் வைக்கப்படும் உதவிகளை ஏற்றுக் கொண்டால் உங்களுக்கு தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகை கிடைக்கலாம்.

OFPRA விடம் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் சேர்க்கப்பட்டபின்னரே, உங்கள் விண்ணப்பம் பதியப் பெற்றதிலிருந்து அதிக பட்சம் 21 நாட்களுக்குள் உதவித் தொகை வழங்கப்படும்.

## உதவித் தொகையின் அளவு.

தஞ்சம் கோருவோருக்கான உதவித் தொகையைப் பெற உங்கள் மாதாந்திர வருமானம் சராசரி குறைந்த பட்ச வருமானத்தை (RSA)விடக் குறைவாக இருக்க வேண்டும்..

உதவித் தொகையின் அளவு ஒரு அட்டவணையின் அடிப்படையில் உங்கள் குடும்ப அளவு, உங்கள் வருமானம் மற்றும் உங்கள் குடியிருப்பின வகை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

## பணம் பெறுதல்

உதவித் தொகையின் முதல் விநியோகம் நீங்கள் OFPRA விடம் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணபத்தைச் சமர்ப்பித்தபின் ஆரம்பிக்கும். உங்கள் கைபேசி எண்ணை நீங்கள் OFII யிடம் கொடுத்திருந்தால் உங்கள் கார்டில் பணம் ஏற்றப்பட்டபிறகு உங்களுக்கு குறுஞ்செய்தி வரும்.

உதவித் தொகை ஃப்ரான்ஸ் நாட்டில் உங்கள் உதவி முடிவடையும் மாதத்தின் கடைசி வரை வழங்கப்படும் (தலைப்பு «உதவிக்கு முடிவு»பகுதிகள் 3.1 மற்றும் 3.2 இல் பார்க்கவும்).

தஞ்சம் கோரும் விண்ணபத்தின் மீதான முடிவான தீர்ப்பு வெளியான மாதத்திறகு அடுத்த மாதம் வரை உதவித் தொகை வழங்கப்படும்.

## முறையீடு.

நீங்கள் உங்கள் நிலைமை பற்றிய அனைத்து மாற்றங்களையும், தங்கும் உரிமை, குடும்ப நிலைமை, உங்கள் நிதி நிலைமை அல்லது வேலை இது போன்ற எந்த விஷயமாக இருந்தாலும், OFIIயிடம் அவசியம் தெரிவிக்க வேண்டும்.

உதவித் தொகை பற்றிய OFIIஎடுக்கும் எந்த ஒரு முடிவைப்பற்றியும் கேள்வி கேட்க வேண்டுமென நினைத்தால் நீங்கள் OFIIயிடம் இலவசமாக முறையிடலாம். இந்த விஷயத்தில் நிர்வாக நீதி மன்றம் அதன் மேல் முறையீடு செய்வதற்கான இடமாகும்.

**உங்கள்அனுமதிசலுகைகளுக்குஎப்பொழுதுமுடிவு வரும் ?**

வரவேற்கும் போது வழங்கப்பட்ட சலுகைகள் நீங்கள் ஃப்ரானஸ் நாட்டில் இருக்க உங்கள் அனுமதி

முடியும் மாதத்தின் கடைசியில் முடிவுக்கு வரும்.

*OFPRA*வினால் நிராகரிப்பது (பாதுகாப்பான நாட்டிலிருந்து வருபவர், அவரால் பொது அமைதிக்கு பங்கம் விளையக்கூடும்) என்பது போன்ற சில காரணங்களுக்காக முடிவு செய்யப்பட்ட துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் வைக்கப்பட்ட தஞ்சம் கோருவோரின் தங்குவதற்கான உரிமை நீதி மன்றம் அவர்களை வெளியேற்றும் ஆணையைத் தள்ளிப போடக் கோரி செய்த விண்ணபத்தைத் தள்ளுபடி செய்வது அல்லது *CNDA*வின் முடிவு அறிவிக்கப்படும் வரை நீடிக்கும். (பகுதி 5.1.பார்க்கவும்).

நீங்கள் அகதியாக அங்கீகரிக்கப்பட்டாலோ அல்லது இரண்டாம் நிலை பாதுகாப்பு வழங்கப்பட்டாலோ அந்த முடிவு அறிவிக்கப்பட்ட மாதத்திற்கு அடுத்த மாதக் கடைசியில் இந்தச் சலுகைகள் முடிவுக்கு வரும்.

எனினும், கீழ்க்கண்டசமயங்களில் இந்தச் சலுகைகள் முடிவுக்கு வரும்:*:*

- தகுந்த காரணமில்லாமல் உங்கள் தங்குமிடத்தை விட்டு வெளியேறினீர்கள் *;*
-அதிகாரிகள் முன் வரவில்லை, கேட்கப்பட்ட தகவல்களைத் தரவில்லை அல்லது தஞ்சம் வழங்கும் நடைமுறை சம்மந்தப்பட்ட நேர் காணலுக்கு வரவில்லை;
- OFIIயால் நீங்கள் வேறு ஒரு தங்குமிடத்திற்கோ அல்லது முதல் நிலை மையத்திற்கோ அனுப்பப்பட்டால் குறிப்பிட்ட 5 நாட்களுக்குள் அங்கு போய்ச் சேரவில்லை; *;*
- OFIIயினால் நீங்கள் வேறு ஒரு பிராந்தியத்திறகு அனுப்பப்படுகிறீர்கள்ஆனால் நீங்கள்*OFII* யின் அனுமதி இல்லாமல் அந்த இடத்தை விட்டு வெளியேறுகிறீர்கள்*'.*
- உங்கள் வருமானத்தை மறைத்துள்ளீர்கள்;
- உங்கள் குடும்ப நிலை பற்றித் தவறான தகவல்களைக் கொடுத்துள்ளீர்கள் *;*
- பல் வேறு அடையாளங்களில் தஞ்சம் கோரி பல விண்ணப்பங்கள் கொடுத்துள்ளீர்கள்;*;*
- நீங்கள் வன்முறையாக நடந்துள்ளீர்கள் அல்லது தங்குமிடத்தின் விதிகளை மீறியுள்ளீர்கள்*t.*

இது பற்றிய முடிவு உங்களிடமிருந்து எழுத்து மூலம் விளக்கம் கேட்டபின் எடுக்கப்படும். வருமானம் பற்றிய தகவல் மறைத்தல், குடும்ப நிலை பற்றித் தவறான தகவல், பல அடையாளங்களில் பல விண்ணப்பங்கள் செய்தல் போன்ற நிலைகளில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட உதவித் தொகை திரும்பக் கேட்கப்படலாம்.

### 4.3. கல்வி வசதி

தஞ்சம் கோருவோரின் குழந்தைகளுக்கான கல்வி வசதி இந்நாட்டினருக்காக நிருவப்பட்டதை ஒத்ததே.

கல்விக் கோட்பாடு விதி (பிரிவு L.111-2)ன் படி, « ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளிக் கல்வி பெறுவத்றகான உரிமை உண்டு, குடும்பத்தினரின் உதவியுடன் அது குழந்தையின் கல்விக்கு உதவுகிறது». « 6 வயது முதல் 16 வயது வரை உள்ள இரு பாலரையும் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளிக் கல்வி கட்டாயமாகும் என்பது குறிப்பிடத்தக்கது , (மேலே குறிப்பிட்ட கோட்பாடு பிரிவு L.131-1).

முதல் நிலை பள்ளியில் பதிவு நகராட்சி அலுவலகத்தில் செய்யப்படுகிறது. நீங்கள் அதற்குக் கீழ்க்கண்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் : உங்கள் குழந்தை என்பதற்குச் சான்று, உங்கள் வசிக்குமிடம், மற்றும் குழந்தைக்கு அனைத்து தடுப்பூசிகளும் அப்பொழுது வரை கொடுக்கப்பட்டதன் சான்று.

உயர் கல்வி நிலையங்களில் பதிவு (உயர் நிலைப் பள்ளி அல்லது கல்லூரி) நேரடியாக அந்த நிறுவனத்திலேயே நடைபெறுகிறது. உங்கள் வசிக்குமிடத்திற்கு மிக அருகாமையில் உள்ள நிறுவனத்தை அணுகவும்.

உங்களுக்கு நிர்வாக, சட்ட ரீதியான மற்றும் சமூக நல உதவி அளிக்கும் குழு, அதாவது நீங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யும் குழு அல்லது முதல் நிலை வரவேற்பு மையம் (SPADA)OFII உடன் ஒப்பந்தம் செய்து கொண்டது (பகுதி 2.1 பார்க்கவும்) உங்களுக்கு இந்த முயற்சிகளில் உதவலாம்.

### 4.4. மருத்துவ வசதி

■ ***சிகிச்சை எங்கு பெறுவது?***

- **மருத்துவநிபுணரிடம்) மருத்துவமனைக்குவெளியே (**

உடல் நலத்திற்கான அனைத்து பிரச்சினைகளுக்கும் நீங்கள் ஒரு «பொது» மருத்துவரை அணுகலாம். அவர் உங்களுக்குத் தேவையான மருந்துகளைச் சிபாரிசுச் செய்வார். அவர் உங்களை ஒரு «சிறப்பு>> மருத்துவரைக் காணவோ அல்லது துணை மருத்துவ நிபுணரையோ (செவிலி, பிஸியோ தெரபிஸ்டு...) உங்களுக்கு அதிகப்படியான சிகிச்சை தேவைப்படுகிறது என்றால் சிபாரிசு செய்வார்.

- **மருந்தகத்தில் :** மருந்துகளை வாங்கவோ அல்லது ஆலோசனை பெறவோ

- **மருத்துவமனையில் :** அவசர நிலையிலோ அல்லது சில சோதனைகளுக்கோ அல்லது சிறப்பு மருத்துவரைக் காணவோ.

**இந்த சேவைகளுக்குப் பணம் செலுத்த வேண்டும், ஆனால் இவை உங்கள் மருத்துவக் காப்பீட்டால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படலாம்.**(பின் வரும் பாராகிராஃபைப் பார்க்கவும்).

**உங்கள்மருத்துவக்காப்பீட்டிற்காகக்காத்திருக்கும்காலத்தில்நீங்கள்கீழ்க்கண்டஇடங்களில்இலவசமாகச்சிகிச்சைபெறலாம்:**

- எல்லா விதச் சிகிச்சைகளுக்கும் :
  - நீங்கள் ஒரு மருத்துவ மனையில் இருக்கும் சுகாதார சேவைக்கான நிரந்தர மையத்தை PASS) அணுகலாம். மருத்துவர்கள் உங்களைக் கவனித்து சிகிச்சை செய்வார்கள் மற்றும் மருந்துகள் இலவசமாகக் கொடுக்கப்படும்..
  - சில சிறப்புச் சங்கங்கள் (மெடிஸேன் த மோந்த், கோமெத், போன்றவை) பொது மருத்துவம், பல் மருத்துவம் அல்லது சிறப்பு மருத்துவம் (மகப்பேறு, கண் சிகிச்சை அல்லது மனோ தத்துவ சிகிச்சை போன்றவை) ஆகியவற்றில் இலவசமாக ஆலோசனை வழங்குகின்றன.
- குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு :

- கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறு காலத்தில் தொடர் சிகிச்சை, மற்றும் 6 ஆண்டுகளுக்குக் குறைவான குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுதல்: PMI மையத்தில் (தாய் சேய் பாதுகாப்பு மையம்)
- காச நோய் பரிசோதனைக்கு: CLATமைய்த்தில் (காச நோய் ஒழிப்பு மையம்)
- எச் ஐ வி, காமாலை மற்றும் பால்வினை நோய்கள்: இலவச தகவல், பரிசோதனை மற்றும் கண்டறிதல் மையங்களில் (CeGIDD)
- கருத்தடை சாதனங்களுக்கு :குடும்பத் திட்ட மையங்களில்(CPEF)
- போதைப் பழக்கங்கள் : போதைப் பழக்கத்திலிருந்து விடுபட, உதவி பெற மற்றும் தடுக்க உதவும் மையம் (CSAPA)

**முதல்நிலைவரவேற்புமையம்,நீங்கள்தங்கும்மையம்அல்லதுஅருகில்உள்ளமருத்துவமனைபோன்றவற்றில்இவைபற்றியதகவல்பெறலாம்அல்லதுபார்க்கவும்**http ://annuairesante.ameli.fr

***அவசரச் சிகிச்சைக்கு*** 15அல்லது112 தொலைபேசிஎண்களைஅழைக்கவும் அல்லது அழைக்க முடியாவிட்டால் உங்கள் மிக அருகாமையில் உள்ள மருத்துவ மனக்குச் செல்லவும்.

## ■ உங்கள் மருத்துவச் செலவிற்கான உதவியை எவ்வாறு பெறுவது?

**ஃப்ரானஸ் நாட்டில் மருத்துவச் சேவை கட்டணத்திற்குட்பட்டது, ஆனால் நீங்கள் ஒரு மருத்துவக் காப்பீடு எடுத்துக் கொள்ள முடியும் . அது மருத்துவத்திறகான முழு அல்லது பகுதி செலவை ஏற்றுக் கொள்ளும்.**

இது, அனைத்து வித பொது மருத்துவக் காப்பீடு (PUMa) மற்றும் கூடுதல் சுகாதாரக் காப்பீடு(CSS) என்றும் இரு வகைப்படும்.

இந்த வசதிகள் மூலம் நடைமுறையில் இருக்கும் அனைத்து சிகிச்சைகளுக்கும் உதவி கிடைக்கும், கண் கண்ணாடி, செயற்கைப் பல், உட்பட. மேலும் கூடுதல் சுகாதாரக் காப்பீடு மூலம் நீங்கள் முன் பணம் செலுத்தாமலேயே சிகிச்சைகளைப் பெற முடியும் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களில் சலுகை பெறலாம்.

**நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள மருத்துவக் காப்பீட்டிற்கான முதல் நிலை மையத்தை அணுகாலம்) .CPAM).**

- **உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதிலிருந்து உங்கள் மைனர் குழந்தைகளுக்கும்:** நீங்கள் <மருத்துவக் காப்பீட்டிற்கான விண்ணப்பம்> மற்றும் <கூடுதல் சுகாதாரக் காப்பீட்டிற்கான விண்ணப்பம்> ஆகியவற்றைப் பூர்த்தி செய்து உங்கள் குழந்தைகளின் பெயர்கள் இடம் பெறும் தஞ்சம் கோரும் விண்ணப்பப் பதிவுச் சான்றின் நகலுடன் இணைத்தால் போதுமானது.

- **ஃப்ரான்ஸ் நாட்டில் மூன்று மாதங்கள் வசித்த பிறகு உங்களுக்கும்) அல்லது உங்கள் துணைவருக்கும்:(** அச்சமயம் நீங்கள் இந்த விண்ணப்பங்களை மறுபடியும் பூர்த்தி செய்து. அவற்றுடன், தஞ்சம் கோரும் விண்ணப்பப் பதிவுச் சான்றின் நகலுடன் கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் ஃப்ரான்ஸ் நாட்டில் வசித்ததற்கான அத்தாட்சியையும் இணைக்க வேண்டும், உ.ம்.: கடந்த மூன்று மாதங்களுக்குத் தங்கியிருந்ததற்கான தங்கும் வசதியளிக்கும் மையத்தின் சான்று: மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட விலாஸச் சான்று: மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட தஞ்சம் கோரும் விண்ணப்பச் சான்று: மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட தஞ்சம் கோருவோருக்கான முதற்கட்ட வரவேற்பு மையத்தினால் (SPADA)வழங்கப்பட்ட ஏதாவது ஆவணம்: வேறு ஒருவருடன் தங்கியிருந்தால், அந்த நபரால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம், இதில் தங்க ஆரம்பித்த தேதி குறிப்பிட்டிருக்க வேண்டும், மற்றும் அந்த நபரின் விலாஸத்திற்கான அத்தாட்சி கடைசி மூன்று மாதங்களுக்கான அவர் பெயரில் உள்ள (வாடகை ரசீது, மின் கட்டண அட்டை ...) ஆகியவை இணைக்கப்பட வேண்டும்.

உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தைகளுக்கோ அவசரச் சிகிச்சை தேவைப்பட்டால், அதற்கான ஆதாரத்தை இணைத்தால் உங்கள் கோப்பு சீக்கிரம் பரிசீலிக்கப்பட்டு மருத்துவக் காப்பீடு சீக்கிரம் கிடைக்கும்.

இவற்றைச் செய்வதற்கு நீங்கள் உங்கள் தஞ்சம் கோருவோருக்கான முதற்கட்ட வரவேற்பு மையத்தினால் (SPADA) அல்லது நீங்கள் தங்கியிருக்கும் மையம் (CADA, HUDA…) அல்லது ஒரு மருத்துவ மனையின் சமூக நலச் சேவையின் உதவியை நாடலாம்.

**நீங்கள் மருத்துவக் காப்பீட்டிற்கான முதல் நிலை மையத்திற்கு உங்கள் கோப்பை அனுப்பும் நாள் முதல் தான் உங்களுக்குக் காப்பீடு கிடைக்கும் . ஆகவே குழந்தைகளின் வருகைக்குக் காத்திராமல்) உங்கள் தஞ்சம் மோரும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டவுடன் (மற்றும் உங்களுக்கும் உங்கள் துணைவருக்கும் ஃப்ரான்ஸ் நாட்டில் மூன்று மாதங்களுக்குத் தங்கியிருந்ததற்கான நிரூபணம் கிடைத்த உடன் விண்ணப்பிக்க வேண்டும் .**

உங்களுக்கு ஒரு அத்தாட்சி வழங்கப்படும். அதை நீங்கள் மருத்துவர், மருத்துவ மனை அல்லது மருந்துக் கடையில் காணபித்து சிகிச்சை பெறலாம். இந்த அத்தாட்சி மையத்தினால் விண்ணப்பத்தில் நீங்கள் கொடுத்துள்ள விலாஸத்திற்கு அனுப்பப்படும்: விண்ணப்பத்தில் நீங்கள் தங்கியிருக்கும் இடத்தின் விலாஸத்தைக் குறிப்பிட வேண்டும்.

தஞ்சம் கோரும் உங்கள் விண்ணப்பப் பரிசோதனை காலம் முழுவதும், மற்றும் உங்களுக்கு சர்வ தேசப் பாதுகாப்புக் கிடைத்தால் அதற்குப் பிறகும் காப்பீடு கிடைக்கும். கூடுதல் சுகாதாரக்காப்பீடானது 1 வருடத்திற்குச் செல்லுபடியாகும் என்பதால் அது தொடர்ந்து கிடைப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பிக்க வேண்டும். இது அருலில் இருக்கும் காலம் முடிவடைவதற்கு 4 முதல் 2 மாதங்களுக்கு முன்பே விண்ணப்பித்தல் நல்லது.

**உங்களுடைய காப்பீட்டு உரிமைகள் தொடங்குவதற்கு முன்பே உங்களுக்கு நடைமுறையில் உள்ள உபாதைகளுக்கு முந்திய> சிகிச்சை எங்கு பெறுவது <பகுதியில் குறிப்பிட்ட இலவசச் சிகிச்சை மையங்களில் கட்டணமின்றி சிகிச்சை பெறலாம் .**

**மருத்துவ மனையில் உங்களுக்கு <அவசர சிகிச்சை>யும் வழங்கப்படும்.** இவற்றில் எந்தெந்த சிகிச்சைகள் காத்திருக்க முடியாதோ அவை அடங்கும், உ.ம்.: ஆழமான காயம், எலும்பு முறிவு, தீக்காயம், தொற்றக்கூடிய அல்லது தீவிரமான நோய், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான அனைத்துச் சிகிச்சைகளும், (குறிப்பாக பேறு காலத்திலும் அதற்கப்புறமும் செய்யப்படும் பரிசோதனைகள், பிரசவம், கருச்சிதைவு ...) **நீங்கள் மருத்துவ மனைக்கு வந்த வுடன் உங்கள் தஞ்சம் கோரும் விண்ண்ப்பத்தைப் பதிவு செய்ததின் அத்தாட்சியைக் கொடுத்தால் கட்டணமின்றி சிகிச்சை பெற முடியும் .**

**<u>நினைவில் வைத்திருக்கவும்:</u>**

**உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட உடனே உங்கள் மைனர் குழந்தைகளுக்கும் ஃப்ரான்ஸ் நாட்டில் மூன்று மாதங்கள் வசித்த பிறகு உங்களுக்கும் உங்கள் துணைவருக்கும் நீங்கள் தங்கியிருக்கும் பகுதிக்கான சிபீஏஎம் மையத்தில் மருத்துவக் காப்பீடு கோரலாம்.**

**காப்பீட்டிற்காகக் காத்திருக்கும் காலத்தில் நீங்கள் நீங்கள் உங்கள் <அவசரச் சிகிச்சைக்காக> சில மையங்களிலோ அல்லது மருத்துவ மனையிலோ கட்டணமின்றி சிகிச்சை பெறலாம். தஞ்சம் கோரும் உங்கள் விண்ணப் பதிவு நகலைக் காண்பிக்கவும்.**

***உங்கள் நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் CPAM மையத்திற்குத் தெரியப்படுத்தவும்:*** *ஒவ்வொரு முறை தஞ்சம் கோரும் உங்கள் விண்ணப்பத்தைப் புதுப்பித்தும் அதன் சான்று, விலாஸச் சான்று, உங்களுக்கு சர்வ தேசப் பாதுகாப்புக் கிடைத்திருந்தால் உங்கள் தங்குவதற்கான உரிம அட்டைக்கான விண்ணப்பத்தின் நகல் ஆகியவற்றின் நகல்.*

## 4.5. வேலை வாய்ப்பு

உங்களைச் சுட்டிக் காட்ட முடியாத காரணங்களுக்காக OFPRA உங்கள் தஞ்சம் கோரும் விண்ணபத்தின் மேல் விண்ணப்பம் சமர்ப்பித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் முடிவு எடுக்கவில்லையென்றால் தஞ்சம் கோரியவர் என்ற முறையில் நீங்கள் வேலை செய்ய அனுமதிக்கப்படலாம்.

அந்த நிலையில் நீங்கள் உங்கள் வருங்கால வேலை கொடுக்கும் நிறுவனத்தின் விண்ணப்பத்தின் பேரில் வேலை செய்ய அனுமதி கோரலாம். அதை நீங்கள் வசிக்கும் பகுதியின் DIRECCTE அலுவலகத்தின் கைத் தொழில் மையத்திலிருந்து (SMOE) பெறலாம்.

வேலை செய்வதற்கான அனுமதி விண்ணப்பத்தின் மீது காவல் துறை / DIRECCTE/SMOE யினால் இரண்டு மாதங்களுக்குள் எடுக்கப்படும். இந்தக் கெடுவுக்குள் உங்களுக்குப் பதில் கிடைக்கவில்லையென்றால் நீங்கள் அனுமதி கொடுத்ததாக எடுத்துக் கொள்ளலாம். இந்த அனுமதி உங்கள் வருங்கால வேலை கொடுக்கும் நிறுவனத்திற்கும் உங்களுக்கும் தெரிவுக்கப்படும் மற்றும் அது உங்களுக்கு இந்த நாட்டில் தங்கியிருக்க ஒருமை இருக்கும் காலம் வரை அமலில் இருக்கும்.

ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் காவல் துறையினர் 3 மாதங்களுக்கு மேல் வேலை செய்க்கூடிய உரிமங்களைப் பற்றியோ அல்லது பருவத்தில் வேலை செய்வதற்கான உரிமத்தையோ OFIIக்குத் தெரியப்படுத்துவர். .

வேலைக்கு ஆள் சேர்ப்பதில் உள்ள கடினத்தைப் பொறுத்து முக்கியமாக அந்தப் பிராந்தியத்தில் உள்ள வேலை வாய்ப்பு நிலையைப் பொறுத்து அல்லது அந்தத்துறையைப் பொறுத்து இந்த உரிமம் மறுக்கப்படலாம்,

உங்களிடம் வேலை செய்வதற்கான தற்காலிக உரிமம் இருந்து உங்களைச் சுட்டிக் காட்ட முடியாத காரணங்களுக்காக உங்கள் வேலை தடைப்பட்டால் அல்லது காலம் குறிப்பிட்ட வேலை ஒப்பந்தத்தின் காலம் முடிந்து விட்டால் அல்லது அது ஒரு தற்காலிக ஒப்பந்தமாக இருந்தால் நீங்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் உங்களை வேலை தேடுபவராகப் பதிவு செய்யக் கோரலாம்.

நீங்கள் தனியான மைனராக இருந்து உங்களிடம் தொழிற் பயிற்சியை முடிக்கவோ அல்லது தொழில் படிப்பு படிக்கவோ காலம் குறிப்பிட்ட வேலை செய்வதற்கான உரிமம் இருந்தால் நீங்கள் உங்கள் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தை மார்ச் 1 2019 க்குமுன் சமர்ப்பித்திருந்தால் வேலையில் தொடரலாம்..

கடைசியாக, வேலை வாய்ப்புக்கான உங்கள் விண்ணப்பம் ஏற்கப்பட்டால், வேலை செய்யும் சட்டங்களின் கீழ் குறிப்பிட்டபடி தொழிற் பயிற்சிகளைப் பெறலாம்.

# 5.தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் இந்த நாட்டில் தங்குவதற்கான உரிமை மீது விளைவு

## 5.1. OFPRA மற்றும் CNDAவின் விண்ணப்ப நிராகரிப்பதென்ற முடிவு.

■ **OFPRAவின் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் தங்குவதற்கு முடிவு**

✓ **CNDA*விடம்செய்யும்முறையீடுதடைவிதிக்காது* :**

பகுதி .3.1 இல் காட்டியபடி OFPRA எடுக்கும் கீழ்க்கண்ட முடிவுகளில் ஏதேனும் ஒன்று உங்களுக்குப் பொறுந்தியிருந்தால் நாட்டில் நீங்கள்தங்கியிருக்க்க கொடுக்கப்பட்ட உரிமை முடிவுக்கு வரும்:

1. நீங்கள் வேறு ஒரு நாட்டில் ஏற்கனவே பாதுகாப்புப பெற்றிருக்கிறீர்கள் என்றால், அந்த நாடு ஐரோப்பிய ஐக்கியத்தில் சேர்ந்தது இல்லை மற்றும் நீங்கள் திரும்பவும் அங்கு செல்ல முடியும் என்கிற காரணத்தினால் உங்கள் விண்ணபத்தை பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ள முடியாது என்றன முடிவு (பகுதி 3.3 பார்க்கவும்);
2. விண்ணபத்தை மூடுவது என்ற முடிவு (பகுதி 3.3 பார்க்கவும்);
3. உங்களை வெளியேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது உங்கள் மறு பரிசீலனைக்கான முதல் மனுவை ஏற்றுக் கொள்ளமுடியாது எனும் முடிவு..

இந்த நிலைகளில், தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி உங்களிடமிருந்து திரும்பப் பெறப்படலாம் அல்லது புதுப்பிக்கப்படாமலிருக்கலாம்.மற்றும் ஃப்ரான்ஸ் நாட்டைவிட்டு நீங்கள் வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். CNDAவின் முன் செய்யப்படும் மேல் முறையீடு இந்த முடிவிற்குத் தடை விதிக்காது மற்றும் உங்களை வெளியேற்றும் நடவடிக்கை உங்கள் மீது எப்பொழுது வேண்டுமாஆனலும் எடுக்கப்படலாம்.

நீங்கள் OFPRA விடம் உங்கள் விண்ணபத்தைத் திரும்பப் பெறுவதாகத் தெரிவித்திருந்தால் நீங்கள் தங்கும் உரிமையை இழப்பீர்கள் மற்றும் CNDA வின் முன் செய்யும் முறையீடு தடை விதிக்காது.

✓ **CNDA*விடம்செய்யும்முறையீடுதன்னிச்சையாகத் தடைவிதிக்காது* :**

OFPRA வின் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு முடிவினால் நாட்டில் ததங்கியிருக்கும் உங்கள் உரிமை முடிவுக்கு வரும்:

1. உங்களை வெளியேற்ற ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டாலும் உங்கள் மறு பரிசீலனைக்கான முதல் மனுவை ஏற்றுக் கொள்ளமுடியாது எனும் முடிவு ;
2. ஏற்றுக் கொள்ளக்கூடிய மறு பரிசீலனை மனுவின் நிராகரிப்பு ;
3. துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட உங்கள் தஞ்சம் கோரும் மனு நீங்கள் ஒரு பாதுகாப்பான நாட்டிலிருந்து வருகிறீர்கள் என்பதால் நிராகரிப்பு ;
4. துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட உங்கள் தஞ்சம் கோரும் மனு நீங்கள் இந்த நாட்டில் இருப்பதால் பொது அமைதிக்குப் பங்கம் விளையும் என்ற காரணத்தினால் நிராகரிப்பு
5. உங்களை வெளியேற்றும் நடவடிக்கை அல்லது நாட்டிலிருக்கத் தடை மற்றும் நீங்கள் வீட்டுக் காவலில் அல்லது சிறையில் வைக்கப்பட்டுள்ளீர்கள் எனும் காரணத்தினால் மனு பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்ற முடிவு அல்லது நிராகரிப்பு (தலைப்பு <<உங்கள்மீதுவெளியேற்றுவதற்கானநடவடிக்கை , நிர்வாக்த்தினால்அல்லதுநீதிமன்றத்திஆனல்ஒருஇடத்திற்குவரத்தடைபோன்றவைஉள்ளனவா?>> பகுதி 2.2.1 இல் பார்க்கவும்.).

நிலைகள் 1 முதல் 4 இல், தஞ்சம் கோரும் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி உங்களிடமிருந்து திரும்பப் பெறப்படலாம் அல்லது புதுப்பிக்கப்படாமலிருக்கலாம்மற்றும் ஃப்ரான்ஸ் நாட்டைவிட்டு நீங்கள் வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்படும்.

நீங்கள் OQTFவுக்கு ஆளானால் உடனடி தீர்வு மற்றும் உங்கள் தஞ்சம் கோரும் மனுவின் மீநான நடவடிக்கைக்காக வீட்டுக் காவலில் வைக்கப்படலாம் அல்லது உங்கள் விண்ணப்பம் எந்தக் காரணங்களுக்காக செய்யப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய அல்லது தேசப் பாதுகாப்பு கருதி அல்லது பொது அமைதிக்காகத் தேவைப்பட்டால் சிறைப்படுத்தப்படலாம்.

மறு பரிசீலனை மனு தன்னியக்கமாகத் தடை விதிக்காவிட்டால் நீங்கள் நிர்வாக மன்றத்திடம், நீங்கள் உள்ளான OQTF வுக்கு எதிரான முறையீட்டில், உங்களை வெளயேற்ற எடுக்கப்படும் நடவடிக்கையை நீங்கள் CNDA வில் OFPRAவின் முடிவுக்கு எதிராக முறையீடு செய்யும் வரையிலோ அல்லது ஏற்கனவே செய்திருந்தால் CNDA தன் முடிவை அறிவிக்கும் வரை நிறுத்தி வைக்கக் கோரலாம்.

